ஜனவரி 2014 January | இதழ் 276 ISSUE

# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION








23rd Year

Growing with the Community Estd. 1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம், ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
ரஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிராஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

ஆசிரியரிடமிருந்து — **From the Editor**

## நம்பிக்கையுடன் வரவேற்கிறோம்!

பூமிப்பந்தின் காலவோட்ட ஆங்கிலக் கணிப்பில் இன்னொரு புத்தாண்டு பிறந்திருக்கிறது.

2014ம் ஆண்டை உலக மக்கள் அனைவருடனும் சேர்ந்து நாமும் வரவேற்கிறோம்; மேலாக, பெருநம்பிக்கையுடன் வரவேற்கிறோம் என்றால் அதில் தவறில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் முதல் மாதமான தை எப்போதும் சிறப்புக்குரியது. இயற்கைக்கு நன்றி கூறும் மாதம் இது. மண்ணையும் விண்ணையும் வணங்கித் துதித்து, சூரியனுக்குப் பொங்கலிடும் திங்கள் இது.

கனடியத் தமிழர்களைப் பொறுத்தளவில் இன்னொரு சிறப்புண்டு. 'தமிழர் மரபுரிமைத் திங்கள்' என்ற மகுடத்தில் இந்த மாதம் முழுவதும் இங்கு போற்றப்படுகின்றது. ஆங்காங்கு இந்த மாதம் முழுவதும் தமிழரின் பாரம்பரியங்களையும் விழுமியங்களையும் எடுத்துக்காட்டும் பல விழாக்கள் ஏற்பாடாகியுள்ளன.

2009ல் முள்ளிவாய்க்கால் தந்த வலியினால் துவண்டு போகாத கனடியத் தமிழர், அதனையே தங்கள் வலிமையாக்கி, 2010லிருந்து தை மாதத்தைத் தங்கள் மாதமாக்கி இந்த மண்ணில் தங்கள் அடையாளத்தை விதைத்து விழாவெடுத்து வருவது ஒரு சாதனை.

கடந்த நான்காண்டுகளாக நடைபெற்ற 'தமிழர் மரபுரிமைத் திங்கள்' என்ற வரலாற்று நிகழ்வை ரொறன்ரோ, மார்க்கம் உட்பட்ட பத்து வரையான நகர சபைகள் அதிகாரபூர்வமாகப் பிரகடனம் (Proclamation) செய்து வழங்கிய ஆதரவையும் உற்சாகத்தையும் நாம் நன்றியுடன் பதிவு செய்ய வேண்டும்.

இந்த மாதம் இடம்பெறுவது ஐந்தாவது ஆண்டு 'தமிழர் மரபுத் திங்கள்' நிகழ்வு. கனடாவின் தலைநகரமான ஒட்டாவா நகரசபை முதற்தடவையாக இதனை வரவேற்றுப் பிரகடனம் செய்திருப்பது முக்கியமான மைற்கல்.

'தமிழர் மரபுரிமைத் திங்கள்' ஸ்தாபகரும், அதன் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான நீதன் ஷண் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், "I am delighted to announce another milestone in our Tamil Heritage Month (TMH) effort. Our capital city, City of Ottawa has proclaimed January as Tamil Heritage Month...." என்று தெரிவித்துள்ளார்.

ஒன்ராறியோ மாகாண சபையிலும், ஒட்டாவா நாடாளுமன்றத்திலும் இது தொடர்பான பிரேரணைகளை நிறைவேற்றி தமிழர் மரபுரிமைத் திங்களைப் பிரகடனம் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது மகிழ்ச்சி தருகின்றது.

காலக்கிரமத்தில், தமிழர் மரபுரிமைத் திங்கள் என்பது உலகளாவிய ரீதியில், தமிழர் வாழும் சமூக வெளியெங்கும் கொண்டாடப்பட வேண்டும் என்பதே அனைவரதும் விருப்பம்!

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto &
Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

## பெப்ரவரி 15 சனிக்கிழமை 23வது ஆண்டு மலர் வெளியீடும் விருது விழாவும்

'தமிழர் தகவல்' சஞ்சிகை இந்த இதழுடன் 23 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது என்பதை மகிழ்வான மனதுடன் வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

1991 பெப்ரவரியில் வெளிவர ஆரம்பித்த 'தமிழர் தகவல்', கனடாவின் மூத்த தமிழ் ஊடகம் என்ற பெருமையுடன், கனடியத் தமிழரின் அடையாளமாக மிளிர்கின்றது.

தமிழர் தகவலின் 23வது ஆண்டு மலர் வெளியீட்டுடன் வருடாந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு அடுத்த மாதம் (2014 பெப்ரவரி) 15ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

23வது ஆண்டு மலர் முன்னைய மலர்களைப் போன்று சுமார் 160 பக்கங்களில் வெளிவரவுள்ளது. கனடாவிலும், புலம்பெயர் நாடுகளிலும் - குறிப்பாக ஆஸ்திரேலியா, இங்கிலாந்து ஜேர்மனி ஆகிய நாடுகளில் வாழும் பிரமுகர்களின் தகவல்சார் கட்டுரைகள் மலரில் முக்கிய இடம் பெறுகின்றன.

கடந்த ஆண்டுகளைப் போன்று இவ்வருட விழாவிலும் சமூகப்பணி, கலைப்பணி, இலக்கியப் பணி, எழுத்துப்பணி சார்ந்த முதன்மையாளர்களும் மூத்தவர்களும் விருதுபெறத் தெரிவாகியுள்ளார்கள். கல்வித்துறையுடன் கலை மற்றும் விளையாட்டுத் துறைகளில் சாதனை புரிந்துள்ள இரண்டு மாணவர்கள் இளையோர் விருதுக்குத் தெரிவாகியுள்ளனர். 'வாழ்நாள் சாதனையாளர்' விருதை சர்வதேசப் புகழ்பெற்ற துறைசார் பிரமுகர் ஒருவர் பெறுகின்றார்.

அழைக்கப்படுபவர்கள் மட்டும் கலந்து கொள்ளும் இவ்வைபவத்துக்கான அழைப்பிதழ், இந்த மாதம் (2014 ஜனவரி) 31ம் திகதிக்கு தபால் மூலம் கிடைக்கக்கூடியதாக உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

விழாவில் பங்குபற்ற விரும்புபவர்கள் 416 920 9250 தொலைபேசி இலக்கத்தில் தங்கள் பெயரையும், தொலைபேசி இலக்கத்தில் பதிவு செய்தால், உரிய வேளையில் தொடர்பு கொள்ளப்படுவர்.

## ஒன்ராறியோ மாகாணத்தில் வசிக்கும் அகதிக் கோரிக்கையாளருக்கு தற்காலிக இலவச வைத்திய வசதி

## Reinstating Access Health Care for Refugee Claimants

### Ontario Filling Federal Funding Gap with Temporary Program

Ontario is joining other provinces by reinstating access to essential and urgent health care for refugee claimants through the new Ontario Temporary Health Program.

கனடிய மத்திய அரசாங்கத்தினால் நிறுத்தப்பட்டிருந்த அகதிக் கோரிக்கையாளருக்கான இலவச மருத்துவ வசதியைத், தற்காலிக திட்டமொன்றின் அடிப்படையில் வழங்க ஒன்ராறியோ மாகாண அரசு முன்வந்துள்ளது.

ஒன்ராறியோவில் வசிக்கும் அகதிக் கோரிக்கையாளர்கள் இந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து இந்த இலவச மருத்துவ வசதியைப் பெறுவர். கனடிய மத்திய அரசாங்கத்தினால் மருத்துவ சேவை நிறுத்தப்பட்ட ஒன்ராறியோவிலுள்ள அகதிக் கோரிக்கையாளர்கள் இங்குள்ள வைத்தியசாலைகளில் இச்சேவையைப் பெறுவதுடன், குறிப்பிட்ட மருந்து வகைகளையும் பெறுவர்.

Through the temporary provincial program, refugee claimants who are not eligible for health care under the new fedearl rules or through other government programs will be able to access most primary care and urgent hospital services, as well as medication coverage. Effective January 01, 2014, the program will help reduce unnecessary emergency room visits and stress on health provider by providing vulnerable refugee claimants with basic health care services as soon as a health issue surfaces.

மத்திய அரசாங்கத்தின் முன்னைய வைத்திய திட்டம் போன்று, சில குறிப்பிட்ட அகதிக் கோரிக்கையாளர்கள் மூன்று மாதம் வரை பொறுத்திருக்காது உடனடியாகவே இந்த வைத்திய சேவையைப் பெறுவர்.

18 வயதுக்குட்பட்ட பிள்ளைகள், கர்ப்பிணித் தாய்மார், மருத்துவர் ஒருவரின் கருத்தின்படி உடனடியாக வைத்திய சேவை தேவைப்படுவோர் ஆகியோர் இந்த வகையினுள் அடங்குவர்.

அகதிக் கோரிக்கையாளர்கள், அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு மேன்முறையீடு செய்திருப்போர் ஆகியோருக்கான வைத்திய வசதியை கனடிய மத்திய அரசாங்கம் 2012 ஜூன் மாதத்திலிருந்து ரத்துச் செய்தது.

ஆனால் அல்பேர்ட்டா, மனிரோபா, சஸ்கச்சுவன், நொவாஸ்கொஷியா மற்றும் கியுபெக் மாகாண அரசாங்கங்கள் தங்கள் நிர்வாகத்துக்குட்பட்ட நகரங்களில் வசிப்பவர்களுக்கு வைத்திய வசதியை வழங்கி வருகின்றன. இந்த அடிப்படையிலேயே ஒன்ராறியோ மாகாண அரசாங்கமும் வைத்திய வசதியை இந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பித்துள்ளது. அதேசமயம், இதனால் ஏற்படும் செலவினங்களை மத்திய ஆசாங்கம் ஒன்ராறியோ மாகாண அரசுக்கு மீளளிக்க வேண்டுமெனவும் மாகாண சுகாதார அமைச்சர் டெப் மத்தியுஸ் தெரிவித்துள்ளார்.

கனடாவுக்கு வருடாந்தம் வரும் அகதிகளில் சுமார் 55 வீதமானவர்கள் ஒன்ராறியோ மாகாணத்திலேயே குடியேறுகின்றனர் இத்தெகை சராசரியாக வருடமொன்றுக்கு 48,900 ஆகவுள்ளது.

இவர்களுள் பெரும்பாலானவர்கள் ரொறன்ரோ பெரும்பாகத்திலும், கணிசமாக ஒரு தொகையினர் ஹமில்ரன், ஒட்டவா ஆகிய நகரங்களிலும் குடியேறி வருகின்றனர்.

அகதிக் கோரிக்கையாளர்களின் வைத்திய வசதியை மத்திய அரசு ரத்துச் செய்ததால், முப்பது வீதத்துக்கும் அதிகமானவர்கள் எந்த வைத்திய சேவையுமின்றி பாதிப்படைந்துள்ளனர் என்று ஒன்ராறியோ மாகாண அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

எஸ்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

வீதியில் வாகனங்கள் செல்லும்போது சுற்றுச்சூழலை அசுத்தப்படாதிருப்பதற்காக Drive clean emissions test நடத்துவதற்குச் செலுத்தப்படும் கட்டணத்தை 30 டாலர்களாகக் குறைக்க ஒன்ராறியோ மாகாண அரசு இணங்கியுள்ளது. 1996ல் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தப் பரிசோதனை, எழு வருடங்களைத் தாண்டிய ஒவ்வொரு வாகனத்துக்கும், இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை கட்டாயமாகும். புதிய குறைந்த கட்டணம் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி அமுலுக்கு வருகின்றது.

ஒன்ராறியோ குடியிருப்பாளர்களின் மின்கட்டணம் இந்த வருடத்தில் மாதத்துக்கு பன்னிரண்டு டாலர்களினால் அதிகரிக்கப்படுகின்றது. 2016ம் ஆண்டில் மேலும் 30 டாலர்களால் இது உயர்வு பெறும். இந்த அதிகரிப்பு படிப்படியாக உயர்ந்து 800 கிலோவாட்டுகளுக்கு மாதமொன்றுக்கு தற்போதைய 125 டாலர்களிலிருந்து 167 டாலர்களாகமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த 20 வருடங்களுக்கு வருடாந்த அதிகரிப்பு சராசரியாக 2.8 விகிதமாக இருக்கும்.

ஒன்ராறியோ மாகாண சபைக்கான தேர்தல் அநேகமாக இந்தவருட முற்பகுதியில் - வசந்த காலத்தின்போது நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. டால்ரன் மக்கன்ரி திடீரென முதலமைச்சர் பதவியிலிருந்து விலகியதையடுத்து, கடந்த பெப்ரவரியில் அப்பதவிக்கு வந்த கத்லின் வின், தொடர்ந்து ஆட்சி நடத்த முடியாத நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளார். எதிர்க்கட்சிகளான என். டி. பி மற்றும் கன்சர்வேடிவ் மட்டுமன்றி லிபரலும் தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது.

வீடுவீடாகச் சென்று தபால் விநியோகம் செய்வதைப் படிப்படியாக நிறுத்துவதற்கு கனடா போஸ்ற் திணைக்களம் தீர்மானித்துள்ளது. இன்டர்நெட், ஸ்கைப் மற்றும் சமூக வலைத்தளங்களால் தபால்களின் பாவனை வீழ்ச்சி கண்டிருப்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. காலக்கிரமத்தில் பொதுமக்களுக்கு வசதியாக சமூக தபால் பெட்டிகளை அமைப்பதுடன், 6000 முதல் 8000 வரையான ஊழியர்களைப் பணியிலிருந்து நீக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க முதல் கறுப்பின ஜனாதிபதி நெல்சன் மன்டேலாவின் இறுதிச் சடங்கில் கனடியத் தலைவர்கள் ஒரு குழுவாகப் பங்குபற்றி இறுதி மரியாதை செலுத்தினர். பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர், முன்னாள் பிரதமர்கள் பிறைன் மல்றோனி, ஜோன் கிரட்ஷியன், கிம் காம்பல், ஜோ கிளார்க், எதிர்க்கட்சித் தலைவர் ரொம் மல்கெயர், முன்னாள் கவர்னர் ஜெனரல்கள் அட்றியன் கிளார்க்சன், மிஷேல் ஜோன் மற்றும் நான்கு மாகாண முதல்வர்கள் இதில் பங்குபற்றினர்.

ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்திலிருந்து அமெரிக்கா செல்லும் பயணிகளின் கடவுச் சீட்டுப் பதிவு, படம் பிடித்தல் ஆகியவைகளை தானியங்கு முறையில் பயணிகள் சுயமாகவே செய்து கொள்ளும் தொழில்நுட்ப சேவை கடந்த மாதத்திலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது. இதனால் பயணிகளின் காத்திருக்கும் நேரம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த வசதி ஏற்கனவே மொன்றியல், வன்கூவர் விமான நிலையங்களில் நடைமுறையிலுள்ளது.

கடந்த மாதம் ரொறன்ரோவில் வீசிய பனிப் புயலினாலும் உறை மழையாலும் சுமார் மூன்று லட்சம் மக்கள் மின்சார வசதியை இழக்க நேரிட்டது. இதனால் கிறிஸ்மஸ் நாட்கள் பல இடங்களிலும் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் கழிந்தது. கணிசமான தொகையினர் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலும், நகரசபையின் பொது மண்டபங்களிலும் சில நாட்களைக் கழித்தனர். ரொறன்ரோவைச் சுற்றியுள்ள மாரக்கம், மிசிசாகா, பிராம்டன், பிக்கரிங், ஏஜக்ஸ் பகுதிகளும் மின் வசதியின்றிப் பாதிக்கப்பட்டன.

## 2013ம் ஆண்டின் ஆங்கிலச் சொல் Selfie

2013ம் ஆண்டின் ஆங்கிலச் சொல்லாக 'செல்பி' (Selfie) என்பது ஒக்ஸ்போர்ட் அகராதியால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இது ஒரு புதிய ஆங்கிலச் சொல்லாகும். யாராவது ஒருவர் ஸ்மார்ட் போன் அல்லது வெப் கமராக்ளைப் பயன்டுத்தி தம்மைத்தாமே ஒளிப்படமெடுத்து அதனைச் சமூக வலைத் தளங்களிலே பதிவிறிக்கம் செய்வதே 'செல்பி' எனப் பெயரிடப்பட்டு அழைக்கப்படுகின்றது. ஆஸ்திரேலிய இணையத்தள உரையாடலிலிருந்து இச்சொல் பாவனைக்கு வந்துள்ளது. ஆங்கிலம் பேசும் நாடுகளில் புதிதாகச் சேர்ந்துள்ள 'செல்பி' சிறப்பானதொரு அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. இது தொடர்பாக ஒக்ஸ்போர்ட் அகராதியின் ஆசிரியபீடப் பணிப்பாளரான ஜுன் பேர்சல் கருத்து வெளியிடுகையில், சமூக வலைத்தளங்கள் ஆங்கிலச் சொற்களுக்கு புத்துயிர் அளித்து புதிய சொற்களையும் உருவாக்கி வருகின்றன' என்று தெரிவித்தார்.

## 2013ம் ஆண்டில் 71 ஊடகவியலாளர் கொலை

கடந்த ஆண்டில் உலகம் முழுவதும் 71 ஊடகவியலாளர் கொலை செய்யப்பட்டுள்ளதாக எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு அறிவித்துள்ளது. இவர்களில் 24 பேர் ஆசியப் பிரதேசத்தில் கொல்லப்பட்டுள்ளனர் இதுதவிர, உலகம் முழுவதும் கடந்தாண்டில் 2160 செய்தியாளர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளானதாகவும், 826 பேர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கூகிள் தேடுதளத்தில் நெல்சன் மன்டேலா முதலிடம்

உலகின் மிகப்பிரபல்யமான தேடுதளமாக இன்று கூகிள் (google) அமைந்துள்ளது. 2013ஆம் ஆண்டில் இங்கு அதிகம் தேடப்பட்ட பத்துச் சொற்களின் விபரங்கள் வெளியாகியுள்ளது. ஆகக்கூடிய அளவில் கூகிளில் தேடப்பட்ட சொல்லாக நெல்சன் மன்டேலா இருக்கின்றது. இரண்டாவது இடத்தில் போல் வாக்கர் என்ற சொல் வந்துள்ளது. இவர்கள் இருவரும் கடந்த நவம்பர் மாதத்தில் மரணமானவர்கள் நெல்சன் மன்டேலா உலக அரசியல் தலைவர். போல் வாக்கர் புகழ்பெற்ற ஒரு நடிகர். ஐபோன், றோயல் பேபி, நோர்த் கொரியா ஆகிய சொற்களும் முதற் பத்துக்குள் இடம்பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2013 - மறைக்க முடியாத சில ஒளிக்காட்சிகள்

## இதற்காகத்தான் இவர்கள் தென்னாபிரிக்கா போனார்களா?



நெல்சன் மன்டேலாவின் நினைவஞ்சலி பிரார்த்தனை நிகழ்வுக்கு 64 நாடுகளின் தலைவர்கள் தென்னாபிரிக்க தலைநகருக்குச் சென்றது முக்கியமான ஒரு செய்தி. ஆனால், அங்கு அமெரிக்க ஜனாதிபதியும் பிரித்தானிய பிரதமரும் சம்பந்தப்பட்ட புகைப்பட நிகழ்வொன்று பிரபல்யமான செய்தியாயிற்று. பிரார்த்தனை நிகழ்வின்போது டென்மார்க் நாட்டின் பிரதமர் ஹெலி துரோனிங் ஸ்மித் அவர்கள் அமெரிக்க அதிபர் ஒபாமாவுடனும், பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரோனுடனும் தமது கைத்தொலைபேசியில் படம் எடுத்து, மூவரும் குதுகலமாகவிருந்தது பிரித்தானிய பத்திரிகைகளில் வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்திவிட்டது.

ஒரு நினைவஞ்சலி நிகழ்வில், சோகமான சூழ்நிலையில் அப்படியாக மூவரும் ஒட்டிக்கொண்டு தமது கைத்தொலைபேசியிலேயே படம் பிடித்துக்கொண்டது பொருத்தமற்ற ஒரு நடவடிக்கை என்று சில பத்திரிகைகள் விமர்சித்துள்ளன. பெண்ணான டென்மார்க் பிரதமருடன் ஒபாமாவும் கமரேனும் ஒட்டிக்கொண்டு படம் பிடிப்பதை ஒபாமாவின் மனைவியான மிஷேல் ஒபாமா கோபத்துடன் பார்ப்பது போன்ற பாவனையில் ஒரு படத்தை வெளியிட்ட சில பிரித்தானியப் பத்திரிகைகள், 'அதிபர் ஒபாமா தனது மனைவியிடம் வாங்கிக் கட்டப்போகிறார்' என்று கேலி செய்திருந்தன. இன்னொரு பத்திரிகை ஒபாமாவின் மனைவி இதனை வெறுப்புடன் பார்ப்பதாகக் கூறியுள்ளது. (நன்றி: பி.பி.சி செய்திச் சேவை)

## ஆடினார், நடனம் ஆடினார் சுற்றிச் சுழன்று ஆடினார்!



கிறிஸ்மஸ் கொண்டாட்டம் என்றால் யாருக்குத்தான் சந்தோஷமில்லை. இதில், ரொறன்ரோ மேயர் றொப் போஃர்ட் மட்டும் விதிவிலக்காகி விட முடியுமா? ரொறன்ரோ நகர மண்டபத்தில் இடம்பெற்ற கிறிஸ்மஸ் நிகழ்வில் வியர்த்துக் களைக்க இவர் நடனமாடிய காட்சி உலக ஊடகங்களின் வரவேற்பைப் பெற்றது. ரொறன்ரோ மேயர் என்ன செய்தாலும் அது செய்தியாகின்ற காலம் இது. 2013ம் ஆண்டில் செய்திகளின் முதல்வராகவும் இவர் தெரிவாகியுள்ளது தெரிந்ததே. இதற்குக் காரணமே இங்குள்ள சில அச்சு ஊடகங்கள்தான்.


## மகிந்த - கமரோன் சந்தித்த வேளையில்....

இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டுக்கு பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரோன் சென்றது பற்றிப பல விமர்சனங்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. 'புலம்பெயர்ந்த தமிழர்களின் பிரதிநிதிபோல கமரோன் செயற்படுகிறார்' என்ற குற்றச்சாட்டு இவர்மீது இப்போது வைக்கப்பட்டுள்ளது.



பொதுநலவாய மாநாட்டுக்குச் சென்ற கமரோன், அதற்கு முன்னர் யாழ்ப்பாணம் சென்று பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்ததும் கூட்டமைப்பினரைச் சந்தித்து உரையாடியதும் இலங்கை அரசை ஆத்திரமடைய வைத்தது. பிரிட்டன் திரும்புவதற்கு முன்னர் டேவிட் கமரோன் சம்பிரதாயபூர்வமான சந்திப்பொன்றை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் மேற்கொண்டார். எள்ளளவுக்குக்கூட மனதார விருப்பமில்லாத - வெறுமனே சம்பிரதாய சந்திப்புத்தான் இது என்பதை மகிந்தவின் வெறுப்பான பார்வையும், டேவிட் கமரோனின் காலுக்கு மேலாகக் கால் போடும் (வீசும்) பாணியும் எடுத்துக் காட்டுகின்றன.

## மாகாண முதல்வரா? ஆதீன முதல்வரா?



தலையில் கிரீடம், கையில் சங்கார வேல், உடம்பைப் போர்த்து ஒரு பட்டாடை, அதன்மேல் ஒரு சந்தன மாலை......... இவர் ஓர் ஆதீன முதல்வரல்ல. வடமாகாண சபையின் முதல்வர் சி.வி. விக்னேஸ்வரனின் ஒரு 'தெய்வீகக்' காட்சி இது. யாழ்ப்பாண மக்கள் தங்கள் அன்பைத் தெரிவிக்க இப்படியொரு தோற்றத்தை அவருக்கு வழங்கி, தங்கள் எதிர்கால நம்பிக்கையை வெளிப்படுத்தினர் என்று சொல்லப்படுகிறது. மாகாண சபைக்குக் காவற்துறை அதிகாரமில்லை. ஆனால் அதன் முதல்வருக்குப் பின்னால் இலங்கைக் காவற்துறையினர் ஒருவர் அவருக்கான காவல் கடமையில் நிற்கின்றார். ஆச்சரியமாக இருக்கிறதா? 'அரசியலென்றால் இதெல்லாம் சகஜமப்பா....!'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# காது மடலில் துவாரப் பிரச்சனைகள்

'காதும் காதும் வைச்சாப்போலை இரகசியம் பேசு'வதற்கு மட்டும் காதுகள் அவசியம் என்றில்லை. ஒலியை உணரும் திறன் உள்ளது என்பதால்தான் காதுகள் மிக முக்கிய உறுப்புகளாக இருக்கின்றன.

செவிப்புலன் இல்லாவிட்டால்:
பறவைகளில் கீச்சல்களும் வண்டுகளின் ரீங்காரங்களும், குழந்தைகளின் மழலைகளும் இல்லாத உலகில் வாழ்வது பற்றி என்றாவது சிந்தித்திருக்கிறீர்களா? 'அதிரும் இந்த ஒலிகளிலிருந்து விடுபட்டு நிசப்தமான உலகில் நிம்மதியாக இருக்க வேண்டும்' எனச் சொல்பவனின் காதுகளை ஒரு சில நிமிடங்களுக்கு செவிடாக்கிவிட்டால் வேண்டாம் இந்தச் சத்தமற்ற உலகு என அலறியடித்து ஓடுவான்.

ஆனால் காதுகள் செவிப்புலனுக்கான உறுப்பு மாத்திரமல்ல. அதற்கு வேறு பல பணிகளும் இருக்கின்றன. அவற்றில் சில அலங்காரத்திற்கானவை. சில அத்தியாவசியமானவை. எமது உடலின் சமநிலையைப் பேணும் உறுப்பு காதின் உட்புறமாக உள்ளது. ஆனால் இன்று நாம் பேசப்போவது காதின் அலங்காரத்தோடு சம்பந்தப்பட்டது.

காதுமடல்:
எமது முகத்தின் இரு பக்கங்களிலும் காது மடல்கள் இருக்கின்றன. குருத்தெலும்புகள் உள்ளே இருக்க அதைச் சுற்றி சிறிது கொழுப்பும், அதை மூடிய மென்மையான சருமமும் காது மடலில் இருக்கின்றன. மனிதக் காதுகளில்தான் எத்தனை அளவு வித்தியாசங்கள், மாறுபாடான நிறங்கள் தோற்றங்கள். இவற்றின் அமைப்புகள் மனிதர்களுக்கு தனித்துவமான அழகு சேர்க்கிறது.

அந்த அழகுக்கு அழகு சேர்க்க அணிகலன்கள் இணைந்து கொள்கின்றன. தோடுகளும் அவற்றை ஒத்த அணிகலங்களும் பெண்களின் தனியுடமையாக இருந்த காலம் மலையேறிப் போய்விட்டது. ஆண்கள் முக்கியமாக இளைஞர்களும் இப்பொழுது அணிந்து கொள்கிறார்கள். இவ்வாறு அணிவதற்கு பொதுவாக காதுமடலில் துளையிட வேண்டியுள்ளது. அதுதான் காது குத்தல்.

காது குத்திய துவாரத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலுமாக காது மடலில் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. உதாரணமாக
1. அரிப்பு, கடி புண்ணாதல் போன்றவை ஓட்டையைச் சுற்றியுள்ள தோலில் ஏற்படுவதுண்டு. தோட்டில் கலந்துள்ள உலோகங்களால் சருமத்தில் அழற்சி ஏற்படும். தங்கம் அல்லாத உலோகங்களிலான அலங்காரத் தோடுகளாலேயே பெரும்பாலும் இது ஏற்படுகிறது. சிலர் காது பகுதிக்கு சோப் போட்டுவிட்டு நன்கு அலசிக் கழுவாதுவிடுவதால் அழற்சி ஏற்படுவதும் உண்டு. அத்தகைய தோடுகளைத் தவிர்ப்பதுடன் மருத்துவர் சிபார்சு செய்யும் கிறீம் வகைகளை பூசுவதன் மூலம் குணமாகும்.
2. தோடு கழன்று விடுமளவு ஓட்டை பெரிதாகிவிடுவதுண்டு.
3. காது ஓட்டை அறுந்துவிடுவதுண்டு.

பிரிந்த அல்லது பெரிதான துவாரங்களைச் சரி செய்தல்:
பாரமான தோடுகளை அணிவதே துவாரம் பெரிதாவதற்கு முக்கிய காரணமாகும். ஒவ்வாமையால் அழற்சி ஏற்பட்டு புண்ணாகிப் பெரிதாவதும் உண்டு. காதணி எங்காவது மாட்டுப்பட்டு இழுபடுவதால் அல்லது குழந்தைகள் காது வளையத்தை விளையாட்டாக இழுப்பதால் பெரிதாவதும் அறுபடுவதும் உண்டு.
பெரிதான துவாரங்களை மறைக்க சிலர் நிறமற்ற ரேப்புகளைக் கொண்டு தற்காலிமாக ஒட்டிவிடுவதுண்டு. இது நல்ல முறையல்ல. சில மணிநேரத்திற்கு அவ்வாறு ஒட்டுவதால் பிரச்சனை ஏற்படாது. நீண்ட நேரம் ஒட்டினால் அவ்விடத்தில் அழற்சி ஏற்பட்டு எக்ஸிமாவாக மாறும் ஆபத்து உண்டு.
அவ்வாறு இல்லாமல் இலகுவான சத்திரசிகிச்சை மூலம் இவற்றை சரிசெய்து நிரந்தரமாகப் பழைய நிலைக்குக் கொண்டுவரலாம். இதைச் செய்வதற்கு சத்திரசிகிச்சைக் கூடங்களுக்கு செல்ல வேண்டும் என்றில்லை. அதேபோல பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை நிபுணர்களை நாட வேண்டியதும் இல்லை. பெரும்பாலான மருத்துவர்கள் தமது ஆலோசனை அறையோடு இணைந்த சிறு சத்திரசிச்சை அறையில் வைத்தே செய்துவிடுகிறார்கள். மயக்கம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. மரக்கச் செய்தல் போதுமானது.

துல்லியமும் நயமும் இணைந்த நுணுக்கமான சிகிச்சை இது. மென்மையான உறுப்பு என்பதாலும், காதின் அழகைக் கெடுக்கக் கூடாது என்பதால்தான் மிகுந்த அவதானம் தேவைப்படுகிறது.
அவ்விடத்தை சுத்தம் செய்து, மரக்கச் செய்வதற்கான ஊசியை ஏற்றுவார்கள்.
அறுந்த அல்லது பிரிந்து துவாரத்தைச் சுற்றியுள்ள இடத்தைக் கீறி, மறுத் (Scar) திசுக்களை அகற்றிய பின்னர் வெட்டிய அவ்விடத்தைப் பொருத்தி நுண்ணிய நூலால் தையல் இடுவார்கள். ஒரு சில நிமிடங்களுக்குள் முடிந்துவிடும்.
காயத்தை மூடி காதில் பன்டேஜ் போடுவார்கள். சுமார் ஒரு வார காலத்தின் பின்னர் தையலிட்ட நூலையும் பன்டேஜையும் அகற்றிவிடலாம். இடைப்பட்ட காலத்தில் அது நனையாமல் இருப்பது அவசியம். சுமார் ஒரு வார காலத்திற்கு அவ்விடத்தை நனைக்கக் கூடாது என்பதால் முகம் கழுவும்போது பன்டேஜில் நீர் படாமல் அவதானமாக இருக்க வேண்டும். தலைமுடியைக் கழுவி சுத்தமாக்கிய பின்னர் இச் சத்திர சிகிச்சைக்கு செல்வது உசிதமானது. அக் காலப் பகுதியில் தலைக்கு எண்ணெய் தடவாதிருப்பதும் நல்லது.

பன்டேஜ் போட்டு காயத்தை மூடாது திறந்தபடி விட்டபடி அன்ரிபயோடிக் ஓயின்மன்ட் பூசி தையலிட்ட காயத்தை மாற வைக்கும் முறையும் உள்ளது. ஆனால் இங்கு பெரும்பாலானவர்கள் அவ்வாறு செய்வதில்லை.
பொதுவாக முன்னைய துவாரத்தை முழுமையாக மூடி விடுவார்கள். பழைய இடத்தில் சிறிய துவாரத்தை மிச்சம் விடுவதில்லை. சத்திரசிகிச்சை செய்த இடம் முழுமையான உறுதி இல்லாமல் இருப்பதால் அதேயிடத்தில் மீண்டும் தோட்டை அணிந்தால் மடலின் திசுக்கள் நொய்ந்து மீண்டும் துவாரம் பெரிதாகாமல் இருப்பதற்காகவே முழுமையாக மூடுவார்கள்.

புதிதாகத் துவாரம் இடுதல்:
சுமார் 1 மாத காலத்தின் பின்னர் புதிய துவாரம் இட வேண்டி நேரும். புதிய துவாரத்தை பழைய இடத்திற்கு அருகில் அவரது விருப்பதிற்கும் தோற்றத்திற்கும் ஏற்ப தேர்ந்தெடுக்கலாம். அவ்விடத்தை மரக்கச் செய்ய மருந்து பூசி செய்யலாம். அல்லது விறைப்பதற்கான ஊசி மருந்தும் போடலாம். தோட்டு நுனியில் துளையிடு வதற்காக அதன் தண்டில் சிறிய கூர் உள்ள பாரமற்ற தோடுகள் கிடைக்கின்றன. அவற்றை பயன்படுத்தலாம். வேறு ஊசிகளால் துவாரமிட்டு அதில் தோட்டை அணியவும் முடியும்.

ஆயினும் மெல்லிய தண்டுள்ள பாரமற்ற தோடுகள் விரும்பப் படுகின்றன.

(30ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# இரண்டு சந்தோசங்கள்

அன்று எனக்கு இரண்டு சந்தோசங்கள். கனடாவில் நேரத்தை ஒரு மணித்தியாலம் பின்னுக்கு தள்ளி வைக்கும் நாள் அது. அதாவது ஒரு மணி நேரத்தை மீண்டும் வாழலாம்.

மொத்தத்தில் எனக்கு அன்று 25 மணித்தியாலங்கள் கிடைக்கும். ஒரு வருடத்தில் ஒருமுறை மட்டுமே இப்படி நடக்கும். ஆகையால் நான் அந்த நாளை ஆவலோடு எதிர்பார்த்திருப்பேன்.

இரண்டாவது சந்தோசம், நான் பெருமதிப்பு வைத்திருக்கும் எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்புக்கு இவ்வருடம் விஷ்ணுபுரம் இலக்கிய விருது கிடைத்திருக்கிறது. அவருக்கும், இந்த விருதை வழங்கும் விஷ்ணுபுரம் இயக்கத்துக்கும் என் வாழ்த்துக்கள்.

கனடாவில் வதியும் நண்பர் ஒருவர் என்னை தொலைபேசியில் அழைத்து 'இலங்கை எழுத்தாளருக்கு இந்தியாவில் விஷ்ணுபுரம் விருது கிடைத்திருக்கிறது' என்றார். நான் 'இலங்கை எழுத்தாளர் என்பதோ, மலையக எழுத்தாளர் என்பதோ அவர் மதிப்பை குறைப்பதாகும். அவர் இலங்கையில் பிறந்த தமிழ் எழுத்தாளர்' என்று கூறினேன்.

தெளிவத்தை ஜோசப்பை ஒரேயொருமுறை அவர் கனடா வந்தபோது சந்தித்திருக்கிறேன். அவரைச் சந்தித்த முதல் இரண்டு நிமிடங்களில் பல வருடங்கள் பழகியது போல இருவரும் அன்னியோன்யமாகிவிட்டோம். மிகவும் நட்பாக பழகுவார். அவருடன் கதக் நடன நிகழ்ச்சி ஒன்று பார்க்கப்போனது நினைவுக்கு வருகிறது. அவர் பார்த்த முதல் கதக் நடனம் என்று அவர் சொன்னதாக ஞாபகம். அடுத்த நாள் ஒரு பூங்காவுக்கு போனோம். அங்கே பலவிதமான மரங்கள் செடிகள் பூக்கன்றுகள் இருந்தன. வெவ்வேறு நாடுகளிருந்து பல்வேறு விதமான மரங்கள் கொண்டுவந்து அங்கே நட்டு வளர்த்திருந்தார்கள். நூறு வருடத்துக்கு மேலே வயதான மரங்களும் இருந்தன. அதிலே ஒரு மரம் நிலத்திலே ஒருவிதமான நச்சுத் திரவத்தை பரப்பியது. அதற்கு கிட்டவாக வேறு எந்த மரமோ செடியோ முளைக்க முடியாமல் அது பார்த்துக்கொண்டது. 'மரங்களில்கூட சுயநலம் பிடித்த மரங்கள் இருக்கின்றனவே' என்று சொல்லி அதிசயித்தார்.

எழுதவேண்டும் என்ற நெருப்பு அவருள்ளே எரிந்துகொண்டிருக்கும். அந்த வெறி, உக்கிரம் இல்லாவிட்டால் எழுத்தாளர் பெரிதாக ஒன்றும் சாதிக்க முடியாது என்பார். அவர் எழுதிய ஒரு சிறுகதையில் ஆண்நாய் ஒன்று பெண் நாயை ஆவேசத்தோடு தேடும். அந்த வீட்டு இரும்புக் கேட் எப்பவும் உயர்ந்துபோய் பூட்டியபடி இருக்கும். ஒருநாள் பக்கத்துவீட்டு பெண் நாய் கேட் வாசலுக்கு வந்துவிடும். ஆண்நாய் உக்கிரமான காமத்தால் உந்தப்பட்டு ஈட்டிக் கம்பிகள் உடலைத் துளைக்க கேட்டைப் பாய்ந்து கடக்கும்.

நல்ல இலக்கியப் படைப்புக்கு தேவை இப்படி உக்கிரமான வெறி. ஏற்கனவே வாழ்ந்து முடித்த மணி நேரத்தை திரும்பவும் ஆரம்பிப்பதுபோல தெளிவத்தையின் படைப்புகள் மீண்டும் தொடரட்டும். இலக்கியம் நிற்காமல் வந்துகொண்டே இருக்க என் வாழ்த்துக்கள்.

## விஷ்ணுபுரம் விருது - 2013

தெளிவத்தை ஜோசப்பின் இயற்பெயர் சந்தனசாமி ஜோசப். பெப்ரவரி 16, 1934 இலங்கை தோட்டம் ஒன்றில் பிறந்தவர். கொழும்பு நகரில் ஒரு சாக்லேட் நிறுவன ஊழியராக இருந்து ஓய்வுபெற்றார். இப்போது கொழும்பு நகரில் வசிக்கிறார்.

தெளிவத்தை ஜோசப்பை கவனத்துக்குக் கொண்டுவந்த முதல் நாவல் 1974ல் வெளிவந்த காலங்கள் சாவதில்லை. வீரகேசரி வெளியீடாக இந்நாவல் வெளிவந்தது.

1979ல் வெளிவந்த நாமிருக்கும் நாடே சிறுகதைத் தொகுதிக்காக இலங்கையின் சாகித்திய விருது பெற்றார்

இலங்கையின் மலையக இலக்கியம் என்ற இலக்கிய வகையை நிலைநாட்டிய முன்னோடி என தெளிவத்தை ஜோசப்பைச் சொல்லலாம். 'மலையகச் சிறுகதைகள்' உழைக்கப் பிறந்தவர்கள் என்ற இரு தொகைநூல்கள் வழியாக மலையக இலக்கியத்தை கவனப்படுத்தியிருக்கிறார். 2000ஆம் ஆண்டில் வெளிவந்த இவரது மலையகச் சிறுகதை வரலாறு அவ்வகையில் முக்கியமான கொடை.

தெளிவந்தை ஜோசப்பின் குடை நிழல் என்ற நாவல் 2010ல் வெளிவந்தது. இந்நாவல் கோமல் சுவாமிநாதன் நடத்திய சுபமங்களா மாத இதழும் தேசிய கலை இலக்கியப் பேரவையும் இணைந்து நடத்திய இலக்கியப் போட்டியில் பரிசுபெற்ற படைப்பு. இப்போது எழுத்து பிரசுரம் அதை தமிழகப்பதிப்பாக வெளியிடவிருக்கிறது.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா?

39

'உடல் நோயைவிட மனநோய்தான் மனிதனை அதிகம் அழிக்கும் தன்மை வாய்ந்தது' - சிசரோ.

இக்கூற்று மிகவும் உண்மையானதொன்றாகும். இதுவரை 300 வகையான மனநோய்கள் கண்டறியப்பட்டுள்ளதாக உளவியலாளர் கருதுகின்றனர். ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கீழ் மனநலம் குறையும்போது, பலர் தன்னிலை இழந்து பொருத்தமற்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இப்படியானவர்களை நாம் பைத்தியக்காரர், விசர்கள், மூளைப்பிசகுள்ளவர்கள், லூசுகள், மூளை கழன்றவர்கள் என்று பலவிதமான பெயர்களில் அழைக்கின்றோம். உண்மையில் இவர்கள் பரிகாசத்துக்குரியவர்களல்ல; பரிதாபத்துக்கு உரியவர்கள்! இவர்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுவர், அவர்களை மனிதர்களாக பலர் கணிப்பதேயில்லை. மனநோய் உள்ளவர்கள் வைத்தியரிடம் செல்லப் பயப்படுவதற்கு முக்கிய காரணம் 'மனநோயாளிக் குடும்பம்' என ஒதுக்கப்பட்டு விடுவோமோ என்ற பயம்தான்.

கடந்த காலங்களில் மனம் பாதிக்கப்பட்டவர்களை பேய், பிசாசு, சூனியம், பில்லி, ஏவல் உடையவர்கள் என்று கூறிவந்துள்ளனர். ஆனால் விஞ்ஞானம், உளவியல், மருத்துவ ஆராய்ச்சிகள் மூலம் இந்த நம்பிக்கைகள் மாறிவருகின்றன. ஹிஸ்ரீரியா (Hysteria) எனப்படும் மிகையுணர்ச்சியுள்ளவர்கள் என்று கூறி திருக்கை மீனின் வாலால் அடித்துள்ளனர்; பேய் பிடித்து விட்டதென்று மந்திரவாதிகளை அழைத்து பூசைகளை வைத்துள்ளனர்; சங்கிலிகளால் பிணைத்து வைத்துள்ளனர்; இருட்டறைகளில் அடைத்துள்ளனர். இப்படியான பல கொடுமைகள் நிகழ்த்தப்பட்டன. கோயில் கோயிலாக சென்று நேர்த்தி செய்தனர்;

கைகளில் கற்பூரம் எரித்து விழுங்கக் கூறினர்; வேப்பிலையால் அடித்து மந்திரித்தனர். இதனால் இதனைப் பயன்படுத்தி பேய் ஓட்டுபவர்கள், மந்திரக்காரர், பூசாரிகள், சாமியார்கள் தோன்றினர். பல்வேறு மூடநம்பிக்கையால் பல முன்னோர்கள் சொன்லொணாத் துன்பங்களை அனுபவித்துள்ளனர்.

இந்து மதத்தினர் மட்டுமன்றி கிறீஸ்தவர்கள் வேளாங்கண்ணி ஆரோக்கியமாதா கோவிலுக்கும், இஸ்லாமியர் நாகூர் ஆண்டவர் தர்காவுக்கும் சென்று வருகின்றனர். இவர்கள் பொருளையும் காலத்தையும் வீணாக்கி நோயை அதிகரிக்க செய்கின்றனர். காலம் கடந்து அளிக்கும் மனநிலை சிகிச்சை பலன் தராது!

உடலில் உள்ள நோயை வெளிப்படையாகக் காண முடியும். ஆனால் உளநோயாளிகளின் செய்கைகள் மூலமே நோயைக் கண்டறிய முடியும். வெளிப்படையாகக் காண முடியாத ஒன்றுக்கு வைத்தியம் செய்வதே மருத்துவருக்கு சவாலாக இருக்கிறது. மருத்துவத்தின் தந்தையான ஹிப்போகிரேட்டஸ் "'மனநோய்' கடவுளால் கொடுக்கப்பட்டதல்ல, அது இயற்கை மனநிலைகளால் ஏற்படுவது" என்று கூறி நெடுங்காலம் சென்றுவிட்டது. சிக்மண்ட் பிராய்டு என்ற நவீன உளவியலாளர் "மனநோய்க்கு காரணம் உள்ளத்தில் ஏற்படும் மாற்றங்களே" என கூறியும் பல வருடங்கள் சென்றுவிட்டன.

எவ்வளவு ஆய்வுகள் வந்தாலும் இன்றும் சமூகத்தில் கையாளப்படும் சொற்கள் அநேகம். பலரும் பேய், ஆவி, பில்லி, சூனியம், மந்திரம், செய்வினை, மாயம், ஏவல் என்று பல்வேறுபட்ட சொற்களைப் பாவித்து அலைந்து திரிகின்றனர். பகுத்தறிவுச் சிந்தனைகள் எப்போது ஏற்படும், உண்மைகள் எப்போது தெரியவரும் என்று தெரியவில்லை!

நினைவு நல்லது வேண்டும் - பாரதி

மீண்டும் தொடர்வேன்!●

## 2014 ஜனவரி தமிழர் மரபுரிமை திங்கள் 9ம் திகதி ஆரம்ப நிகழ்வு

2010 ஜனவரியில் கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட தமிழர் மரபுரிமை மாத நிகழ்வு, இந்த மாதம் ஐந்தாவது ஆண்டாக நடைபெவுள்ளது.

இதன் உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வு இந்த மாதம் 9ம் திகதி பிற்பகல் மார்க்கம் நகர சபை மண்டபத்தில் நடைபெறும் பொதுமக்கள் அனைவரும் இதில் பங்குபற்ற முடியும். அனுமதி இலவசம்.

கடந்த ஆண்டுகளில் ரொறன்ரோ, மார்க்கம், மிசிசாகா, பிராம்டன், டுர்கம் நகரசபைகள் உட்பட பத்து வரையான உள்ளூராட்சிச் சபைகள் தமிழர் மரபுரிமை மாதத்தைப் பிரகடனம் செய்திருந்தன.

இவ்வருடம் கனடாவின் தலைநகரான ஒட்டாவா நகரசபையும் இந்தப் பிரகடனத்தைச் செய்திருப்பது முக்கியமானது.

இந்த மாதம் முழுவதும் சுமார் இருபதுக்கும் அதிகமான தமிழர் அமைப்புகள் மரபுரிமை நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளன.

மரபுரிமை மாத உத்தியோகபூர்வ இறுதி நிகழ்வு இந்த மாதம் 25ம் திகதி பிற்பகல் ஏஜெக்சிலுள்ள ஜே கிளார்க் றிச்சட்சன் கல்லூரி அரங்கில் நடைபெறவுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு மரபுரிமை மாத நிகழ்வுக் குழுத்தலைவர் நீதன் ஷண்ணுடன் 416 824 3399 இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

---

Pew Research Center 2012ல் நடத்திய ஆய்வின்படி 2011ல் 23 வீதம் மாணவர்கள் தமது தொடர்புகளை மின் அஞ்சல் மூலம் செய்தனர். ஆனால் 2012ல் அது 37 வீதம் உயர்ந்துள்ளது. Text messages ஒரு நாளைக்கு 2009ல் சராசரி 50 ஆக இருந்தது, 2011ல் சராசரி ஒரு நாளைக்கு 60 ஆக உயர்ந்துள்ளது. 95 வீதம் மாணவர்கள் இன்று Internet ஐ பாவிக்கிறார்கள். ஆகவே தொடுத்து எழுதுதலை பாவனையிலிருந்து காப்பாற்றுவது அவ்வளவு சுலபமான விடயமல்ல.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# மீண்டும் முக்கியத்துவம் பெறும் தொடுத்து எழுதுதல் திறன்
# Revival of Cursive writing

ஐக்கிய அமெரிக்காவின் 45 பிரிவுகளின் கல்விக் கொள்கை கோட்பாடுகளின் பொதுவிதிகளை அமைத்த பொழுது தொடுத்து எழுதும் முறை கைவிடப்பட்டது. ஆனால் அண்மையில் California, Idaho, Indiana, Kansas, Massachusetts, North Carolina, Utah ஆகிய ஏழு Statesல் தொடுத்து எழுதுதல் கல்வியில் ஒரு முக்கிய அம்சமாகப் பேணப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டுள்ளது. அதிலும் North Carolinaவில் தொடுத்து எழுதுதல் மாத்திரமன்றி வாய்ப்பாடும் பாடமாக்கப்பட வேண்டும் என முடிவு எடுத்துள்ளனர். இது ஒரு வியப்புக்குரிய விடயம். ஏனெனில் முன்னோக்கிச் செல்வதாகக் கூறி மாற்றங்களை ஏற்படுத்தியவர்கள் ஏற்கனவே காணப்பட்ட பழைய முறைக்குச் செல்வது அபூர்வமாக நடைபெறும் ஒரு செயலாகும்.

ஜனாதிபதி ஒபாமா தமது திறைசேரிச் செயலாளராக Jacob Lew என்பவரை 2013ல் நியமித்தார். Jacob Lewவின் கையொப்பம் அமெரிக்க காசுத்தாள்களில் கட்டாயமாக வரவேண்டிய ஒன்று. அவரின் கையெழுத்தில் ஒன்றுமே விளங்கவில்லை. ஒரு கோர்வையா-கப் பல வளையங்களையே அவர் எழுதியிருந்தார். அதனைப் பார்த்த ஒபாமா - “ஜக் எனக்கு ஒரு எழுத்தாவது விளங்கக்கூடிய விதமாக எழுத முயற்சிப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். ஏனென்றால் எங்கள் பணத்தின் பெறுமதி குறையாமல் இருப்பதற்காக” என நகைச்சுவையாகக் கூறினார் (Jack assured me that he is going to work to make at least one letter legible in order not to debase our currency). அவ்வளவு தூரத்துக்கு மக்களின் கையொப்பம் விளங்க முடியாத முறையில் அமைந்துள்ளது.

Idaho பிரதேசத்தின் பிரதிநிதியாகிய Linden Bateman தொடுத்து எழுதும் முறை திரும்பவும் அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற பிரேரணையை சமர்ப்பித்த பொழுது தொடுத்து எழுதுதல் அறிவுத் திறனையும் அழகையும் கொண்டு ஆக்கபூர்வமாகவும் இருப்பதோடு மூளையின் கலங்களையும் விருத்தி செய்வதாகக் கூறுகிறார். இந்தத் தொடுத்து எழுதும் முறையே அறிவில் கூடியவர்களையும், குறைந்தவர்களையும் ஒரு காலத்தில் அடையாளம் காண உதவியது. ஆனால் இன்றோ கணினிகளும், மற்றும் உபகரணங்களும் கையெழுத்து எப்படியிருந்தாலும் பரவாயில்லை என்ற நிலைக்கு மக்களை இட்டுச் சென்றுள்ளது.

இன்று ஒருவரிடம் ஒரு டெலிபோன் எண்ணைக் கேட்டவுடன் அதனை குறிப்பதற்காக நாம் பேனையையும் பேப்பரையும் தேடிய காலம் மலையேறிவிட்டது. உடனேயே அதனைத் தங்கள் டெலிபோனில் தட்டச்சு செய்து பாதுகாக்கிறார்கள் (save). எழுத வேண்டிய தேவையே இன்று அருகிவிட்டது. எல்லோரின் கைகளிலும் கர்ணனின் குண்டலங்கள் போல் ஏதோ ஒரு நவீன தொடர்புச் சாதனம் காணப்படுகிறது. இச் சாதனங்களை இன்றைய இளம் தலைமுறையினரிடம் மாத்திரம் அல்ல வயது வந்தவர்களிடமிருந்தும் பிரிக்க முடியாது இருக்கிறது. ஒரு சுண்டு விரலின் அசைவில் வேண்டியவற்றை மிகவும் துல்லியமாகவும், விரைவாகவும் குறிக்க முடிகிறது. இத்தகைய சூழலில் தொடுத்து எழுதுதல் பற்றிப் பெரிதாக ஒருவரும் அலட்டிக் கொள்ள மாட்டார்கள்.

ஐக்கிய அமெரிக்காவில் பாலர் வகுப்பிலிருந்து - 12 வகுப்புவரைக்கான கலைத்திட்டத்தை தயாரிக்கும்பொழுது வேண்டுமென்றே தொடுத்து எழுதும் முறையை நீக்கினார்கள். இந்தக் கலைத்திட்டத்தின் கொள்கைக்குத் தலைவராக விளங்கிய Morgon Polikoft – Assistant Professor of the University of California கூறுகின்றார் - “எதிர்காலத்தில் மாணவர்கள் தமது பாடசாலையிலோ, தொழிற்துறையிலோ திறம்படச் செயல்பட வேண்டும் என்றால் தட்டச்சுத் திறன் தேவையே ஒழிய தொடுத்து எழுதும் திறன் அல்ல” என்கிறார்.

இன்று கலைத்திட்டத்தைக் கற்பித்து முடிக்கவே நேரம் காணாமல் இருக்கும் பொழுது தொடுத்து எழுதுவதைக் கற்பிக்க எங்கே நேரம் இருக்கிறது என்ற கேள்வியும் எழுந்துள்ளது. ஆயினும் ஐக்கிய அமெரிக்காவில் 07 பிரிவுகளில் இது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதிலும் North Carolinatpy; Back to Basics என்ற கொள்கையின் அடிப்படையில் தொடுத்து எழுதுதலோடு, வாய்ப்பாட்டை மனனம் செய்யும் முறையும் திரும்பவும் அமுலாக்கப்பட்டுள்ளது. இம் மாற்றத்திற்காக வாதாடிய கல்விமான்கள் கூறுகிறார்கள் - தொடுத்து எழுதுதல் கண், கை ஒன்றிணைப்பை அதிகரிக்கின்றது, நன்றாக எழுத வாசிக்க உதவுகின்றது, கிரகிக்கும் தன்மையைக் கூடச் செய்கிறது என்கிறார்கள். வருங்கால கல்வி விற்பன்னர்கள் பலவிதமான சரித்திர சாசனங்கள், தபால்கள், சஞ்சிகைகளை வாசித்து விளங்க முடியாமல் கஷ்டப்படுவார்கள். அமெரிக்காவின் அரசியல் யாப்பு (Constitution) கூட தொடுத்து எழுதுதல் முறையில்தான் எழுதப்பட்டுள்ளதாம். ஆகவே உயர்கல்வி கற்கும்பொழுது பல விடயங்களை உசாவுவதற்கு தொடுத்து எழுதும் திறன் தேவைப்படுகிறது.

5-8 வகுப்புகளுக்கான ஒன்ராறியோவுக்கான கலைத்திட்டம் விளங்கக்கூடிய வகையில் தொடுத்து எழுதப்பட வேண்டும் (legible printing, and cursive writing) என அறிவித்துள்ளது. ஆனால் ஆசிரியர்கள் இதனை எவ்வாறு விளங்கிக் கொண்டுள்ளனர் என்பது தெரியவில்லை OISE பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வொன்றின் பிரகாரம் இங்குள்ள ஆசிரியர்கள் பலருக்கே சரியாகத் தொடுத்து எழுதத் தெரியவில்லை என்பது புலனாகியுள்ளது. 2006ல் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களுக்காக ஐக்கிய அமெரிக்காவில் SAT பிரவேசப் பரீட்சை நடைபெற்ற வேளையில், வியாசம் எழுதும்படி கேட்கப்பட்டபோது 15 வீத மாணவர்களே தொடுத்து எழுதினார்கள். பரீட்சைகள் நடைபெறும் பொழுது மாணவர்கள் தட்டச்சைப் பாவிக்க முடியாத நிலை இன்றும் இருக்கிறது. வேகமாக எழுதவும் இந்த தொடுத்து எழுதும் முறை உதவுகிறது. ஒருவரின் சிந்தனை ஓட்டம் (flow of thoughts and language) நன்கு தடையின்றி வெளிவருவதைக் காணலாம். ஒரு கடிதத்தை தட்டச்சு மூலம் எழுதுவதிலும் பார்க்க தொடுத்து எழுதும் பொழுது அதன் பெறுமதியே அதிகமாகிறது. அந்த எழுதியவர் நேரில் நின்று கதைப்பது போன்ற பிரமை கூட ஏற்படும். தொடுத்து எழுதும் பொழுது ஒவ்வொருவரின் எழுத்தும் ஒவ்வொரு வகையாக அமைகிறது. அந்த கையெழுத்தே கடிதத்தை பிரிக்குமுன்பே யாரிடம் இருந்து அந்தத் தபால் வந்தது என்பதைக் காட்டிக் கொடுத்துவிடும். கையெழுத்திலிருந்து ஒருவரின் குணாதிசயங்களைக் கூட அறிய முடியும் எனக் கூறுகிறார்கள்.●

(8ஆம் பக்கம் வருக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் *பத்தாம் பக்கம்*

# வீட்டுக்கு வராத கடிதங்கள்

கனடாவின் பிரபல வர்த்தக நிலையங்களிலெல்லாம் நத்தார் தாத்தாவின் மடியில் அமர்ந்து புகைப்படங்களாகி குதூகலிப்பது நத்தார் காலத்தில் சிறுவர்களுக்கு ஒரு சம்பிரதாயம். அவ்விதம் அமர்ந்திருந்து தாத்தாவின் தாடியை தன் பிஞ்சுக்கரங்களால் வருடியபடி ஒரு சிறுமி கேட்டாள், "இனிமேல் நீங்கள் அனுப்பும் வாழ்த்து மடல்கள் நேரடியாக எங்கள் வீட்டுக்கு வராதா?"

பக்கத்து வீட்டுக்கு தபாற்காரர் வரும் பொழுதெல்லாம் எமக்கும் ஒரு கடிதமாவது வராதா என கிராமியத்தனமாய் மனதில் எழும் ஏக்கம் தொழில்நுட்ப வளர்ச்சியால் பாமரத்தனமாகி பல காலமாயிற்று என்பதை இப்பொழுதும் நாம் உணரத் தயாராக இல்லை.

சுறுசுறுப்பாய் ஊரைச்சுற்றிய தபாற்காரர்களது பணியை பூகோளத்தைப் புள்ளியாக்கிய மின்னஞ்சல் விறுவிறுவென வீட்டுக்குள்ளாகவே இன்று கவனிப்பதைக் கூட கவனிக்க மறுக்கும் மனது, வீட்டுக்குள் வந்து விழும் கடிதங்களுக்காக கண்களை காத்திருக்க வைக்கின்றது.

ஒருவர் மனதை ஒருவர் அறியும் சேவையாக வாழ்வை இணைக்கும் பாலமாகத் திகழ்ந்த அன்றைய தபாற்காரர் பலருக்கு இன்னுமொரு இதயமாக இன்றும் தெரிவது ஆழ்மனத்தின் அபூர்வ விசித்திரம் என்கின்றனர் புதிய தலைமுறையினர்.

வெகு விரைவில் வீட்டுக்கு வீடு தபால் வினியோகிப்பதை நிறுத்துவதை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளது கனடிய தபால் இலாகா.

பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஐந்து அம்சத்திட்டமொன்றில் முக்கியமானதாகவும் முதன்மையானதாகவும் கருதப்படும் இந்த ஆலோசனை அங்கீகரிக்கப்படின் 2014 நடுப்பகுதியில் ஆரம்பமாகி 2019 ல் நிறைவுறும்.

இதனால் கனடாவில் சுமார் 5 மில்லியன் மக்கள் இதுவரை அனுபவித்து வந்த வீட்டுக்கான நேரடி சேவையை இழக்கவுள்ளனர். எனினும் 700 முதல் 900 வரையான மில்லியன் டாலர்களை சேமிக்க முடியும் என எதிர்வு கூறப்படுகின்றது.

கடந்த வருடத்தின் இறுதிக் காலாண்டில் மட்டும் 104 மில்லியன் டாலர்கள் இழப்பு ஏற்பட்டதாகவும், 2020ம் ஆண்டில் இதுவே ஒரு பில்லியன் டாலராக அதிகரிக்கும் எனவும் கணக்குக் காட்டுகின்றது கனடிய தபால் இலாகா.

இதற்குப் பதிலாக ஒவ்வொரு பகுதியிலும் பொதுவான தகுந்த இடமொன்றிலிருந்து விலாசதாரர் தமக்குரிய கடிதங்களைச் சேகரிக்கும் திட்டம் அமுல்படுத்தவுள்ளது. இச்சேவையை இப்பொழுதும் 33 வீதமான மக்கள் பல்வேறு பகுதிகளில் பெற்றுக்கொள்கின்றார்கள்.

இதற்காக 117 டாலர்களை வருடமொன்றுக்கு ஒவ்வொரு முகவரிக்காகவும் செலவு செய்யவுள்ள தபால் இலாகா இதுவே வீட்டுக்கு வீடு வினியோகிக்கவெனின் 269 டாலர்களை வருடமொன்றுக்கு ஒவ்வொரு முகவரிக்காகவும் தாம் செலவு செய்ய நேரிடும் என்று கூறுகின்றது.

முதியவர்களும் உடல் வலுவிழந்தோரும் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கவுள்ளனர். கனடாவில் சிறுவர்களிடையே மிகவும் பிரசித்தமான நத்தார் தாத்தாவிடமிருந்து பெற்று வந்த வாழ்த்து மடல்களும் எதிர்காலத்தில் வீட்டுக்கு வராது. நத்தார் தாத்தாவின் கடிதங்களுக்குப் பதிலளிப்பதற்காகவும் பரிவர்த்தனை செய்வதற்காகவும் 10000 தொண்டர்களை தற்காலிகமாக சேர்த்துக் கொள்ளும் வழக்கம் மாறும்.

தேவையற்ற வர்த்தக விளம்பரக் குப்பைகளை இனிமேல் வீடுகளுக்கு எடுத்துவரும் தேவையிராது.

தற்பொழுது கனடிய தபால் இலாகாவில் பணி புரியும் 68000 ஊழியர்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைப்பதோடு அடுத்த இரு வருடங்களுக்குள் 8000 ஊழியர்கள் வேலை இழக்கும் நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்தும் என்பதால் தபாற் தொழிற்சங்கம் இதனை எதிர்க்கின்றது.

2013ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதிக்கு முன்னிருந்து கடமையாற்றும் தபால் சேவகர்கள் 24.59 டாலர்களையும் அதன் பின்னர் இணைந்தவர்கள் 19.14 டொலர்களையும் மணித்தியால வேதனமாகப் பெறுகின்றனர்.

16ம் நூற்றாண்டிலிருந்து தபால் சேவை கனடாவிலிருந்தாலும் 1874ம் ஆண்டில்தான் முதன்முதலாக மொன்றியல் பகுதியில் வீட்டுக்கு வீடு தபால் வினியோகம் ஆரம்பமானது. அப்பொழுது முத்திரையின் பெறுமதி மூன்று சதங்கள் மட்டுமே!

இப்பொழுது 63 சதமாகவுள்ள முத்திரை கட்டணம் 2014ம் ஆண்டு மார்ச் 31லிருந்து ஒரு டாலராக உயர்கின்றது.

1947ம் ஆண்டு டெல்லியில் பிறந்த தீபக் சொப்ரா எனும் கணக்காளர் 2011ம் ஆண்டு முதல் நிர்வாக இயக்குனராக கனடா தபாலில் பதவி வகிக்கின்றார். ஐந்து வருட காலத்துக்கான இப்பதவி மூலம் வருட வருமானமாக கிடைப்பது 497,100 டாலர்கள்.

1874ம் ஆண்டு சுவிட்சர்லாந்தில் உலக தபால் அமைப்பு உருவானது. 1969ம் ஆண்டு முதல் அக்டோபர் மாதம் 9ம் திகதி உலக தபால் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

வீட்டுக்கு வராத கடிதங்களை முகவரி மாறிய கடிதங்களாக மட்டும் எதிர்காலம் எதிர்கொள்ளப்போவதில்லை.

நாகரிகமடைந்த கனடாவில் வீட்டுக்கு வீடு தபால் வினியோகம் இப்பொழுதுதான் நிறுத்தம் அடைகின்றது. ஆனால் ஊரில் இருந்து விடுபடாமல் பின்நோக்கிடும் எமது நினைவுகளில் அங்கிருந்த தபாற்காரரில் சிலராவது அப்போதே 'மரப்பொந்துகளை' பொது இட வினியோக மையமாக வசதி கருதி தன்னிச்சையாக மாற்றியிருந்தது முத்திரை பதிக்கும்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னையா விவேகானந்தன்

# கடிதங்களில் வாழும் மனிதர்

11

தமிழரது வாழ்வியல் முறைகளில் கூட்டுவாழ்வு முதன்மையானது. குடும்பமாக, தெருவோடிணைந்த உறவுகளாக, ஊராகக் கூடி வாழ்தலே அன்றுதொட்டுத் தொடர்ந்து வரும் தமிழர்மரபு. பெரிதும் தனித்து வாழத்தெரியாதவர்களாகவே தமிழர் இருந்தனர். வெளிநாடுகளை நோக்கிய புலப்பெயர்வே கூட்டுக் குடும்ப மரபைப் பெரிதும் உடைத்துபோட்டதெனலாம்.

தாயின் மடியிலேயே வளர்ந்த எத்தனையோ இளைஞர்கள் வேறுவழியின்றி புலம்பெயர்ந்து பட்ட துயரங்கள் கொஞ்சமன்று. அன்பினால் பிணைப்புண்டு கூடி வாழ்ந்த உறவுகளைச் சடுதியாகப் பிரிந்து எதுவும் புரியாத இடத்தில் வாழ முற்படுவதென்பது ஒருவகையில் மறுபிறப்புக்கொப்பானது. தொடக்க காலத்தில் இவ்வாறுதான் எம் முன்னோடிகளின் பிரிவுத்துயர் இருந்தது. வாழத்தொடங்கிய புலத்தில் கடும் போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்த நம்மவரை குடும்ப உறவுகளின் பிரிவுத்துயர், தனிமையுணர்வு என்பன வாட்டிவதைத்தன.

"நான் மந்தையைப் பிரிந்த தனி ஆடு
போய் என்ற ஓநாயின்
பிடி உதறித் தப்பிய நான்
அதிட்டத்தால்
வாட்டும் குளிரில் கூட
வாழ்வை ரசிக்கும் கலையை அறிந்தவரின்
நாடு வந்தேன்.
நமக்கிடையே
ஏழுகடலும் இணைந்தன்றோ கிடக்கிறது
விசா என்ற பெயரில்."
(வ.ஐ.ச ஜெயபாலன் கவிதைகள்)
என்கிறார் வ.ஐ.ச ஜெயபாலன்.

'தனியாடாக வந்து வாழ்கின்றேன் என்ற போதும் எல்லா கடல்களும் இணைந்துதான் இருக்கின்றன 'விசா' என்ற பெயரில்' என ஆறுதல் காண முயல்கின்றார் கவிஞர்.
தொடக்ககால முன்னோடிகள் பலரும் தனிமையால் வதைபடாதவர்களாக இருந்திருக்க முடியாது. தொடக்ககாலத் தனிமை வாழ்வு எல்லோரையுமே பந்தாடியிருக்கின்றது.

நிழல் மட்டுமே
துணையான தனிமை
சுற்றிவரக் காடுகள் மனிதர்களாக
முட்களாய்க் குத்தும் உறவுகள்
நான் தனிமையில்
வெறுமையாக........
எப்போது
என்னை அன்பு
துளிர்க்க வைக்கும்? (புலம் பெயர்ந்தோர் கவிதைகள் - தொகுப்பு) என்கிறார் கவிஞர் குருசேவ்.

'எப்போது என்னை அன்பு துளிர்க்க வைக்கும்' என்ற வரிகளில் உள்ள அன்பின் வரட்சியும் ஏக்கமும் அக்கால முன்னோடிகள் அனைவருக்கும் பொதுவானது.

இப்போதிருப்பதைப் போன்று தகவல் தொழில்நுட்பங்கள் பெரிதும் வளர்ச்சியடையாத காலம் அக்காலம். நினைத்தவுடன் தொலைபேசியில் உறவாடும் வாய்ப்பு அப்போது இல்லை. போர்ச்சூழல் காரணமாகத் தாயக உறவுகளோடு பேசுவது பெரிதும் முடியாதிருந்தது. தப்பிப்பிழைத்த கடிதங்கள் சில வாரங்கள் மாதங்களுக்குப் பிறகுதான் உரியவரிடமோ அல்லது முகவரி மாறியோ போய்ச்சேரும். இழப்புச் செய்திகள் கூட சில வாரங்களுக்குப் பிறகே இவர்களை வந்தடைந்திருக்கின்றன.

இந்தத் தேசத்தில்
நாங்களோ
கடிதங்களில் வாழும் மனிதரானோம்.
ஐந்து வருடங்கள்
மனைவியுடனும் சின்ன மகனுடனும்
கடித்தில் குடும்பம் நடத்தும்
என் நண்பன்
எட்டு வருடங்கள்
தாயின் முகத்தைக்
கடிதத்தில் தேடும் என் மச்சான்
கடிதங்களில் வாழும் மனிதரானோம்.
உருத்துகள் உறவுகள்
நெருப்புக்குள் வாழ
அவர்கள் இருப்பின் சுகமறிய
காலைகள் விடிந்ததும்
கடிதங்களைத் தேடுகிறோம்
வீட்டுக்கு வெளியே குளிர் கொட்ட
நெஞ்சுக்கூடு நெருப்புக்குள் அவியுது (கட்டிடக் காட்டுக்குள் பக் 31)

இது செல்வம் அருளானந்தத்தின் துயரப் பதிவுகள். அன்பையும் நெஞ்சோடு வாழும் முகங்களின் புன்னகைகளையும் கடிதங்களில கண்டு உயிரில் உரமேற்றி வாழ்ந்த காலத்தையும், வெந்துகிடந்த இதயங்களையும் வெளிப்படுத்துகின்ற இந்த வரிகள்.

இலங்கை உறைகளோடு கடிதங்கள் வருகின்றபோது, பிரித்துப்பார்க்க முன்னரே அகமும் முகமும் மலர்கின்ற அனுபவம் அக்காலத்தோர்க்கு அலாதியானது. அக்காலத்தில் வந்த கடிதங்களில் பல, அன்பை மட்டும் சுமந்து வரவில்லை. அடைக்கப்பட வேண்டிய கடன் கணக்குகளும் கடிதங்களுக்குள் இருந்தன. வருத்தங்கள் சுமந்து வந்தாலும் இந்த வரிகளே இவர்களை வருடிக் கொடுத்தன.

இன்று ஆறாந்திணையென அழைக்கப்படும் பலம் மிக்கதான சமூகமாக உருக்கொண்டிருக்கும் புலம்பெயர்ந்தோரின் ஆதித் தடங்கள் கல்லிலும் முள்ளிலும் பதிந்த உலர்ந்த உதிரச் சுவடுகளாகவே இருந்திருக்கின்றன.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## படம் காட்டும் 'பப்ளிஸிட்டி' எப்போதும் கைகூடாதாம்!

ரொறன்ரோவில் கடந்த மாதம் நடைபெற்ற ஊடகமொன்றின் வைபவத்துக்கு இந்திய ஊடகமொன்றின் புள்ளி ஒருவர் வந்திருந்தார். விமான நிலையத்தில் அவரை அழைத்து வர அமைப்பாளர் ஆயத்தமானபோது, இங்கு பத்திரிகை ஒன்றை வெளியிடுபவர் தாமும் வருவதாகக் கூறி விமான நிலையம் சென்றார்.

வழக்கம்போலக் கையில் கமராவுடன், தமது கூட்டாளி ஒருவரையும் அழைத்துச் சென்ற அந்தப் பத்திரிகைக்காரர் விரும்பியதுபோலப் படமெடுக்க விழா அமைப்பாளர் அனுமதி வழங்கவில்லை.

அதாவது, வருகை தந்த பிரமுகருடன் தம்மையும் தமது கூட்டாளியையும் நிறுத்தி, அவரை வரவேற்பதாகக் காட்டிப் படம் காட்ட எடுத்த முயற்சி பறிபோனது.

இதனால், அந்த ஊடக நிறுவனத்தின் விழாவுக்கு அந்தப் பத்திரிகைக்காரரும் கூட்டாளியும் தலை காட்டவே இல்லை.

## மெத்தப் படித்தவர்கள் கொஞ்சம் கவனம் வேண்டும்!

ஸ்காபரோவில் நடைபெற்ற ஊர்ச்சங்கமொன்றின் விழாவில் பேச்சாளர் ஒருவர் கூறியதன் சுருக்கம் கீழே:

"உலகறிந்த தமிழ்ப் பெரியார் ஒருவருக்கு ரொறன்ரோவில் இரண்டு நாள் விழா எடுத்தார்கள். ஏனோ தெரியாது பொதுமக்கள் பங்களிப்பு மிகமிகக் குறைவாக இருந்தது.

அது பரவாயில்லை. அந்த விழாவின் நிகழ்ச்சி நிரல் என் கையில் இருக்கிறது. அதிலுள்ள ஒரு வரியைப் படிக்கிறேன், கேளுங்கள்:

"யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்று கொட்டை எழுத்தில் போட்டிருக்கிறார்கள். கனியன் பூங்குன்றனார் 'கேளிர்' என்று சொன்னதையே சரியாக எழுதத் தெரியாதவர்கள்......விழாக்குழுவில் பட்டம் பெற்றவர்களும், பெரிய ஆசிரியர்களும் இருந்தென்ன பயன்?

கனடியத் தமிழரின் மானம் கப்பல் ஏறுவதுதான் மிச்சம்" என்று ஆவேசமாகக் குதறித் தள்ளினார் அந்தப் பேச்சாளர்.

## கவுதமியுடன் கமலஹாசன் சேர்ந்து வாழ்வது ஏன்?

நடிகை கவுதமியுடன் நடிகர் கமலஹாசன் சேர்ந்து வாழ்வது பரகசியம். ஆனால் அதற்கான காரணத்தை அவரே பகிரங்கப்படுத்தியிருப்பது தனி விஷயம்.

"தேவைப்படும்போது நட்பைப் பயன்படுத்திவிட்டு பிறகு வேண்டாமென்பது தவறு. அது நல்ல நட்புக்கு அழகில்லை. கவுதமி என்கூடத்தான் இருக்கிறார். அவரது கவலைகளை நான் புரிந்து வைத்திருக்கிறேன். அவருக்கு சந்தோஷத்தையும் பாசத்தையும் நான் கொடுக்கிறேன்....

வேதனையிலும் பங்கெடுக்கும்போதுதான் பந்தம் பலப்படும். மனதுக்குப் பிடித்த ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதில் என்ன தவறு?.... சேர்ந்து வாழ்பவர்களுக்கு அது சரியென்றால், மற்றவர்கள் அதை ஏன் எதிர்க்க வேண்டும்" என்று கேட்டுள்ளார் கமல்.

"இது பற்றிய கவுதமியின் அபிப்பிராயம் என்னவோ?" என்று, மலையாளப் பத்திரிகை ஒன்று கேள்வி எழுப்பியுள்ளது.

## பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ் இப்போது ஒரு பென்சனியர்

பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ் இப்போது வாரமொன்றுக்கு 27,562 பவுண்ஸ்களை பென்ஷனாகப் பெறுகிறார். கடந்த நவம்பரில் இவருக்கு 65 வயதாகிவிட்டதால் முதுஅரசராகியுள்ள இவரும் இப்போது ஒரு பென்ஷனியர்.

கோர்ண்வோல் கோட்டை, அது சார்ந்த வாடகை, பல லட்சம் ஏக்கர்களின் வருமானம் என்று பல கோடிகளில் மூழ்கியிருக்கும் இவரது வருடாந்த பென்ஷன் 15 லட்சத்துக்கும் அதிகமான தொகை பவுண்ஸ்.

**உதாசனன்**
**உலா விருந்து**

சார்ள்ஸின் இரண்டாம் மனைவி கமிலா இரண்டு வருடங்களுக்கு முன்னரே 65 வயதாகி விட்டதால், அவர் மூத்த பென்ஷனியராகி பல லட்சங்களைப் பெற்று வருகின்றார்.

இத்தம்பதியருக்கான அரண்மனை, பயண வாகன வசதி, ஆடை ஆபரணம், உணவு, குடிவகை எல்லாம் அரச செலவில்!

## பெலரஸில் ஒரு 'பெட் சீட்'; டுபாயில் அதிநவீன கமரா

இலங்கை ஜனாதிபதி மகிந்த தமது வெளிநாட்டுப் பயணங்களுக்கென தனியான கோஷ்டி ஒன்றை வைத்திருக்கிறார். இவர்களுள் அவரது படப்பிடிப்பாளர் ஹேரத் என்பவரும் ஒருவர். படப்பிடிப்பாளர் என்பதைவிட அவர் ஒரு 'பக்காத்' திருடர் என்பது இப்போது அம்பலமாகியுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ சில மாதங்களுக்கு முன்னர் பெலரஸ் நாட்டுக்குச் சென்றபோது, அவருடன் சென்ற ஹேரத், ஐந்து நட்சத்திர ஹோட்டல் அறையின் 'பெட் சீட்'டையும் தம்மோடு கொண்டு சென்று விட்டார்.

கடந்த மாதம் மகிந்த டுபாய் சென்றபோது, விமான நிலையத்தில் மூன்று லட்சம் ருபா பெறுமதியான கமராவொன்றைத் திருடிய ஹேரத் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுள்ளார்.

ஹேரத் போன்ற இன்னும் பல கேடிகள் மகிந்த கோஷ்டியில் இருப்பதாக எதிர்க்கட்சிகள் சொல்கின்றன!

## யாழ். விஜயத்துக்கு முன்னர் வீடு செல்லப் போகிறார்!

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை யாழ்ப்பாணம் வருமாறு வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்திருந்தார்.

விரைவில் மன்மோகன் யாழ்ப்பாணம் செல்லவுள்ளார் என்று அமைச்சர் சிதம்பரம் விடுத்த அறிவிப்பு அரசியலில் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியது.

அதற்கு முன்னராக மன்மோகன் வீடு செல்லவிருப்பதாக பிந்திய தகவல் ஒன்று சொல்கிறது.

ராகுல் காந்தியே இதன் சூத்திரதாரியாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தவா இளையதம்பி

# வருமான வரியற்ற சேமிப்புக் கணக்கு
# Tax Free Saving Account (TFSA)

இத்திட்டத்தில் கனடாவில் வசிப்பவர்கள் 18 வயதிலிருந்து ஆயுட்காலம் வரையும் சேமிப்பில் வைப்பிலிடலாம்.

இத்திட்டமானது 2009ம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்தது. $5000 ஆக ஆரம்பித்து 2013ம் வருடம் $5500 வரையும் சேமிக்க வசதியாக உள்ளது. இத்தொகை மாறக்கூடியது. இத்திட்டத்தில் முதலீடு செய்பவர்களுக்கு கிடைக்கின்ற வட்டியும் அதன் வளர்ச்சியும் சேர்ந்த தொகைக்கு வருமான வரி செலுத்த வேண்டியதில்லை. வருமானத்திலிருந்து விலக்களிக்கப்படுகிறார்கள்.

நீங்கள் இத்திட்டத்தில் சேமிப்பிலிடத் தவறிய தொகையையும் கடந்த வருடங்களில் விடுபட்டதுமாகிய எல்லாத் தொகைகளையும் தேவையான பொழுது வைப்பிலிட முடியும். உங்கள் சேமிப்பில் இருந்து மீளப்பெற்ற தொகையை மீண்டும் பூர்த்தி செய்ய முடியும் எப்போதெனில் இதைச் செய்வதற்கு உங்கள் சேமிப்பிற்கான இடவசதி இருக்குமிடத்து முடியும்.

இது மிகவும் சிறந்த குறுகியகால, நீண்டகால சேமிப்புத் திட்டமாகும். உங்களுக்கு அவசர தேவைகள் ஏற்படும்போது தேவைக்கேற்ற தொகையை சேமிப்பிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். சேமிப்பில் பணம் இல்லாதவிடத்து சாத்தியப்படாது. நீங்கள் இச் சேமிப்புத் திட்டத்தை வங்கிகள், போன்ற நிதி நிறுவனங்களிலும், காப்புறுதி நிறுவனங்களிலும் மேற்கொள்ளலாம்.

நீங்கள் ஒவ்வொரு வருடமும் வைப்பிலிடும் தொகையானது உங்கள் வைப்பிலிடும் தகுதிக்கு மேற்படின் (அதாவது 2013ம் ஆண்டிற்கான உச்ச எல்லையானது $5500) இதற்காகத் தண்டனைப் பணம் மாதத்திற்கு 1 வீதம் செலுத்த வேண்டும். 1% penalty நீங்கள் மேலதிகமாக முதலீடு செய்த தொகையானது உடனடியாக மீளப்பெற்றுக் கொள்ளல் வேண்டும். தவறின் மாதாமாதம் 1% penalty செலுத்த வேண்டும். உதாரணமாக நீங்கள் TFSA இல் உங்கள் எல்லைக்கு மேலதிகமாக செலுத்திய தொகையைப் பற்றிப் பார்க்குமிடத்தில் 2013ம் ஆண்டிற்கான அதியுச்ச கொடுப்பனவுத் தொகையானது $5500 ஆகும். நீங்கள் $15,000 வரையும் வைப்பிலிட்டிருந்தால், வைப்பிலிட்ட தொகையானது $15,000 வைப்பிலிடத் தகுதியான தொகையானது $5500 மேலதிகமாக வைப்பிலிட்ட தொகை $9500 நீங்கள் 2013ம் ஆண்டு மாசி மாதம் 1ம் திகதி $15,000 சேமிப்பிலிட்டால், பின்னர் நீங்கள் அல்லது CRA இனால் கண்டுபிடிக்கப்பட்ட திகதியானது கார்த்திகை 30ம் திகதியாக இருந்தால், 10 மாதங்கள் கால தாமதமாகக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால், 10 மாதத்திற்கான penalty தொகையை செலுத்த வேண்டும். அதாவது $9500 * 10 months * 1% = $950.

நீங்கள் செலுத்த வேண்டிய தண்டனைப் பணமான $950ஐ உடன் CRA இற்குச் செலுத்துவதுடன் மேலதிக சேமிப்பிலிட்ட தொகையான $9500ஐ உடன் திரும்பிப் பெற்றுக் கொள்ள வேண்டும். நீங்கள் இதை உடன் செய்யத் தவறின் மீண்டும் தவறிய மேலதிக நாட்களுக்கு தண்டனைப் பணம் செலுத்தியாக வேண்டும்.

**Tax-Free Savings Account (TFSA)**
The Tax-Free Savings Account is a flexible, registered, general-purpose savings that allows Canadians to earn tax-free investment income to more lifetime savings needs. The TFSA complements existing registered savings plans like the Registered Retirement Savings Plan (RRSP) and the Registered Education Savings Plans.

**How works this account:**
Canadian residents, age 18 and older, can contribute up to $5,500 as of January 2013 annually to TFSA. This is an increase from the annual contribution limit of $5000 for 2004 through 2012 and reflects indexation to inflation.

Investment income earned in a TFSA in Tax-Free and withdrawals from a TFSA are tax-free. Unused TFSA contribution room is carried forward and accumulates in future years.

Full amount of withdrawals can be put back into the TFSA in future years. Re-contributing in the same year may result in an over-contribution amount which would be subject to a penalty tax.

**Contributions are not tax decuctible:**
Choose from a wide range of investment options such as mutual funds, Bonds and (G/Gs) guaranteed investment certificates.
Funds can be given to a spouse or common-law partner for them to invest in their TFSA.
TFSA assets can generally be transferred to a spouse or common-law partner upon death.
Neither income earned within a TFSA nor withdrawals from it affect eligibility for federal income-tested benefits and credits, such as Old Age Security, child tax benefit and GIC.
An over-contribution amount would be 1% penalty tax each month until the withdrawals of exceed amount.●

---

# கவனயீன சாரதிகளுக்கு தண்டப்பணம் அதிகரிக்கும்

கவனயீனமாகவும், கவனத்தைத் திசை திருப்பும் சாதனங்களைப் பயன்படுத்தியும் வரும் சாரதிகளுக்கான தண்டப் பணத்தை அதிகரிப்பது தொடர்பாக ஒன்ராறியோ மாகாண அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது. முக்கியமாகக் கைத்தொலைபேசி பாவனையே பல சாரதிகளது கவனக்குறைவுக்குக் காரணமென்று பொலிசார் தெரிவிக்கின்றனர். கவனத்தைத் திசைதிருப்பும் வகையில் செயற்படும் சாரதிகளுக்கு தற்போது விதிக்கப்படும் தண்டப்பணமான 155 டாலர்களை ஐநூறு டாலர்களாக அரிகரிக்க ஆலோசிக்கப்படுகின்றது. அத்துடன் புள்ளிகளையும் மேலும் வெட்டுவதற்கு மாகாண போக்குவரத்து அமைச்சு விரும்புகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. சம்பந்தன்

# பதவியும் தகுதியும்!

வசதியான குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டும் கணவனின் தவறான நடத்தையால் பொருள் இழந்து காற்சிலம்போடு மட்டும் மதுரைக்கு வருகின்றாள் அந்தப் பெண்! ஆம்! போற்றா ஒழுக்கம் புரிந்தீர்! என்று இளங்கோவடிகள் சொல்லுவாரே! அதைத்தான் மற்றவர்கள் மதிக்காத வேலை செய்து விட்டீர்கள் என்று கணவனைக் கோபித்துப் கொண்டதோடு அவனின் குற்றங்களை மறந்து தன் காற்சிலம்பு ஒன்றைக் கொடுக்கிறாள் அதை விற்றுத் தொழில் தொடங்கும்படி கணவனிடம்!

மதுரையிலே சிலம்பு விற்கப் போன கணவன் கையில் இருந்த சிலம்பு தொலைந்து போன பாண்டிய அரசியின் சிலம்பாகச் சித்தரிக்கப்பட்டு கள்வனைக் கொல்லும்படி பாண்டிய அரசிடம் இருந்து ஆணையும் தந்திரமாகப் பெறப்பட்டு தவறாக தண்டனையும் நிறைவேற்றப்பட்டு விடுகிறது அரசாங்கச் சிலம்பை ஏற்கனவே திருடியவர்களால்!

கணவனை இழந்த கவலை ஒரு புறம்! கள்வன் என்ற அவமானம் ஒரு புறம் என்று துடித்தாள் அந்தப் பெண்! கவலைகள் திரண்டு கோபக் கனலாக மாறியது! மெய்யில் பொடியும் விரித்த கருங்குழலும் கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் என்று பாண்டிய மன்னனைப் பார்க்கப் போனாள்!

அரண்மனைக் காவலன் அவள் கோலத்தைக் கண்டு திகைத்தான்! சற்றுப் பொறு தாயே என்று கூறி விட்டு மன்னனிடம் ஓடினான்! அங்கே தான் இளங்கோவடிகள் பதவியில் இருப்பவன் தகுதி பற்றிச் சுட்டிக் காட்டுவார்!

மன்னனிடம் ஓடிய பணியாள் அரசே ஒரு பொம்பிளை அழுது கொண்டு கையிலே சிலம்போடு உங்களைப் பார்க்க வந்திருக்கின்றாள் என்று மட்டும் சொல்லியிருப்பானேயானால் அதை இங்கு எழுத வேண்டிய அவசியம் இருந்திருக்காது! அது சாதாரண உரையாடலாக மறைந்திருக்கும்!

வந்திருக்கும் பெண் பற்றி அந்த வேலைக்காரன் சில கருத்துக்களைச் சொல்கின்றான். அந்தக் கருத்துக்கள் அவனின் அறிவையும் அனுபவத்தையும் பறைசாற்றுகின்றன! அவன் காவலாளியாக தொழில் பார்த்தாலும் கல்விக் கடலாக மிதக்கிறான்!

அரசே! கோபத்தோடு வந்திருக்கிற பெண் முன்பு மகிடாசூரனின் தலையை வெட்டி வீழ்த்திவிட்டு அருவி போலக் கொட்டிய குருதியையும் பொருட்படுத்தாமல் அந்த தலையின் மீது ஏறி நின்ற வெற்றி வேல் தாங்கிய தடக்கையை உடைய இளங்கொடியாகிய கொற்றவையோ என்று பார்த்தேன் அவளும் இல்லை!

கன்னியர் ஏழு பேரில் இளையவளான பிடாரியோ என்றால் அவளும் இல்லை! இறைவனை நடனமாடக் கண்ட அணங்கு போலவும் தெரியவில்லை! காண்பவரை அஞ்சச் செய்யும் பாலை நிலத்தை விரும்பி உறைகின்ற காளியோ என்றால் அவளும் இல்லை! தாரகாசுரனுடைய அகன்ற மார்பைப் பிளந்த துர்க்கையோ என்றால் அவளும் இல்லை! இவர்களை எல்லாம் விடக் கோபக்காரியாகத் தெரிகின்றாள்!

உங்களைப் பார்க்க வேண்டுமாம் என்கிறாள் என்று சொல்கிறான் அந்தக் காவலாளி!

அடர்த்து எழு குருதி அடங்காப் பசுந் துணிப்
பிடர்த் தலைப் பீடம் ஏறிய மடக்கொடி,
வெற்றி வேல் தடக்கைக் கொற்றவை, அல்லள்
அறுவர்க்கு இளைய நங்கை, இறைவனை
ஆடல் கண்டருளிய அணங்கு, சூர் உடைக்
கானகம் உகந்த காளி, தாருகன்
பேர் உரம் கிழித்த பெண்ணும், அல்லள்
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்
பொன் தொழில் சிலம்பு ஒன்று ஏந்திய கையள்
கணவனை இழந்தாள் கடை அகத்தாளே!

(சிலப்பதிகாரம் - வழக்குரை காதை)

இங்கே பாருங்கள்! ஒரு பணியாளின் வாயிலிருந்து வந்த வார்த்தைகளை! எத்தனை வரலாற்றுச் செய்திகளை அவன் தெரிந்து வைத்திருக்கின்றான்! எத்தனை சமயக் கதைகள் அவனுக்குத் தெரிந்திருக்கின்றது.

உமாதேவி மகிடாசூரனை வதம் செய்த செய்தி அழகாக அவனுக்குத் தெரிந்திருக்கின்றது! கொடிய பாலை நிலத்திலே வாழ்கின்ற காளி பற்றியும் அவனுக்குத் தெரிந்திருக்கிறது. துர்க்கா தேவி தாருகனோடு போர் செய்த செய்தி பற்றியும் அவனுக்குத் தெரிந்திருக்கின்றது!

இதிலே இன்னொரு விடயமும் மறைந்திருக்கின்றது! வாயில் காக்கும் பணி செய்யும் அவன் போர்ப் பயிற்சி பெற்ற போர்வீரனாகத்தானே இருப்பான்! அதனால் அரசனுடன் பேசும் போதும் யுத்தங்களின் செய்திகளையே அவன் உதாரணம் காட்டுகின்றான்! யுத்தத்திலே வெற்றியைச் சந்தித்த கொற்றவையையும் காளியையையும் துர்க்கையையும் அந்தப் போர் வீரன் தன் மனத்திலே உயரத்தில் வைத்திருக்கின்றான்!

இங்கே தான் பதவிக்கான தகுதி இளங்கோவடிகளால் மறைத்து வைக்கப்படுகின்றது! இது காவியம் தானே! காவலாளி சொல்லாமலேயே இளங்கோவடிகள் கற்பனையில் இதை எழுதி இருக்கவும் கூடும்! என்று கதைப்பவர்களும் நிச்சயம் இருப்பார்கள்!

அப்படித்தான் கற்பனையில் பாடி இருந்தாலும் கூட அந்த இலக்கிய கருத்தா அரன்மனைக் காவலாளிக்கு இவையெல்லாம் தெரிந்திருக்க வேண்டும் என்ற தன் எண்ணத்தை தன் கற்பனையால் பதவித் தகுதியாகக் காட்டுகின்றானா? இல்லையா? என்பதைத்தான் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்!

போர்க்களங்களும் அதில் போராடியவர்களும் அதன் வெற்றி தோல்விகளும் அந்தப் போர்ச் சம்பவங்களும் காவலுக்கு நியமிக்கப் படுபவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும் அன்றைக்கும் இன்றைக்கும் என்றைக்கும்! என்ற சிந்தனையை மௌனமாக வலியுறுத்திவிட்டுப் போய்விட்டார் இளங்கோவடிகள்!

இதைத்தான் இன்ன வேலையை இதைக் கொண்டு அல்லது இந்த அறிவைக் கொண்டு இவன் செய்து முடிப்பான் என்று முடிவெடுத்து அந்த வேலையை அவனிடம் ஒப்படைக்க வேண்டும் என்றார் திருவள்ளுவர்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்று ஆய்ந்து
அதனை அவன்கண் விடல்! என்பது பதவி கொடுப்பதற்கு முன்பு நாம் தெரிந்து கொள்ள வேண்டிய திருக்குறள் ஆகும்! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா மூர்த்தி

# கண்டதைச் சொல்கிறேன் 10

புது வருடம் பிறந்துவிட்டது, பழையன கழிதலும் புதியன புகுதலும் தொடங்கும் மாதத்தின் முதல் இதழ் அல்லவா இது. அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகள்! கூடவே தைப்பொங்கல் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

சென்ற மாதம் முகப்புத்தகத்தில் பலதும் பத்தும் விவாதிக்கப்பட்டாலும், கிறிஸ்மஸ் பார்ட்டி படங்கள்தான் பல நண்பர்களின் முகப்புத்தகத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதை சொல்லத் தேவையில்லையல்லவா... வருட முடிவு என்பதால் பல அமைப்புக்களும் தத்தம் அன்பர்களுடன் கிறிஸ்மஸ் பார்ட்டிகளை ஒழுங்கு செய்திருந்தனர். ஆனால் அதுவே ஒரு விவாதப் பொருளாகவும் முகப்புத்தகத்தில் சிலரிடையே இருந்தது. '100 டொலர் டிக்கட் வைத்து ஆடம்பர மண்டபங்களில் ஆடம்பரமாக கிறிஸ்மஸ் பார்ட்டிகளை ஒழுங்கு செய்கிறீர்களே.. போகிறீர்களே.. வீண்ஆடம்பரமாக செலவு செய்வதுபோல உங்களுக்குத் தோன்றவில்லையா?" என ஒரு நண்பர் கிண்டி விட்டார். 'ஒரு ஈவினிங் சாப்பாட்டுக்கும் டின்னர் டான்ஸ"க்கும் ஒரு டேபிளுக்கு 1000 டொலர், தனி ஒருவர் 100 டொலர் என செலவு செய்கிறீர்களே. 100 டொலருக்கு தாய் நாட்டில் ஒருவர் ஒருமாதம் சாப்பிடலாம்" என இளைஞர் ஒருவர் ஆங்கிலத்தில் பதிவிட்டிருந்தார். விவாதம் பலமாக இருந்தாலும் பலரது பதிவும் புலம்பெயர்ந்த கனடா தமிழரிடம் ஒருவகை குற்ற உணர்ச்சியை தோற்றுவிக்கவே எழுதப்பட்டதுபோல இருந்தது. அட... என்ன இது..? கனடாவில் தன் மகிழ்ச்சி பெருக தன் வாழ்க்கையை தான் வாழ்ந்து, தானே அதைக் கொண்டாடுவது தவறா?? அப் பகிர்வுகளைப் படிக்கப் படிக்க, கனடாத் தமிழர்கள் (பெருந்தொகை செலவு செய்து டின்னர் டான்ஸ், ஸ்டார் நைட் அதிகமாக வைத்து கொண்டாடி மகிழும் மனப்பாங்குடைய ரொறன்ரோ தமிழர்கள்) உண்மையிலேயே தாய்நாட்டை மறந்த கல்நெஞ்சக்காரர்கள்தானா என்ற கேள்வி என்னையறியாமலே என் மனதில் எழுந்தது.

கூடவே, அந்த விவாதத்தில் பலரும் மறந்துவிட்ட ஒரு அடிப்படை உண்மையை நானாவது சொல்ல வேண்டும்போலவும் இருந்தது. எனவே "தாய்நாட்டிற்கு உதவ தன் மகிழ்சியை தியாகம் செய்யும் மனப்பாங்கு இப்போது கனடாத் தமிழரிடம் குறைந்து வருகிறது என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. தாய் நாட்டின் வாழ்க்கைப் போக்கு வேறு கனடாவின் வாழ்க்கைப் போக்கு வேறு என்ற 'பிரிவினை எண்ணம்' கனடாத் தமிழ்ச் சமூகத்திடம் இப்போது ஆழமாகியும் வருகிறது. அதற்குக் காரணம் வெகு சிம்பிள்... அது என்ன என்கிறீர்களா? நம் இரு பகுதியையும் தொடர்பில் வைத்திருக்கக் கூடியதொரு ஐக்கியப்படுத்தும் சக்தியாக இப்போது எதுவும் இல்லை." என்று என் கருத்தை எழுதியிருந்தேன்.

ஆம்... தாயகத் தமிழரையும் புலம்பெயர் தமிழரையும் ஐக்கியப்படுத்தும் சக்தியாக இப்போது எதுவும் இல்லை. வெளிநாட்டுத் தமிழருக்கும் அங்குள்ள தமிழருக்கும் இடையே ஒரு திரை விழுந்து கொண்டு இருக்கிறது. (அதன் இன்னொரு வெளிப்பாடுதான் 'நாட்டு அரசியலை நாட்டிலுள்ளோரே பார்க்கட்டும்" என்று சொல்லி இங்குள்ளோர் இப்போதெல்லாம் மெதுவாய் நழுவிவிடும் போக்குமாகும்.) தமிழ் நம்மை இணைக்கலாம். தமிழ் பண்பாடு நம்மை இணைக்கலாம். தமிழ் சினிமா அல்லது தமிழ் இலக்கியம்கூட நம்மை இணைக்கலாம். ஆனால் அவற்றில் எதுவுமே ஐக்கியப்படுத்தும் சக்தி அல்ல.

சிந்தித்துப் பார்த்தால் எந்தவொரு ஐக்கியப்படுத்தும் சக்திக்கும் ஒரு நுண் அரசியல் இருக்கும். அந்த நுண் அரசியல் அரசியல் சித்தாந்தங்களையும் தாண்டி, இன, மத நிற பேதங்களையும் தாண்டி மக்களை வசியப்படுத்தும் வசீகர சக்தி கொண்டதாய் இருக்கும். அப்படியான வசியப்படுத்தும் வசீகர ஐக்கியப்படுத்தும் சக்திக்கு நல்ல உதாரணம் கடந்த மாதம் மறைந்த தலைவர் நெல்சன் மண்டேலா! வெள்ளையர் ஆதிக்கத்திற்கு எதிராக போராடிய ஒருவரை, தன் நேசசக்தியாக கம்யூனிஸ்டுகளை நம்பிய ஒருவரை அவரது மரணத்தின் பின் கௌரவிக்க அத்தனை முதலாளித்துவ மேற்குலக நாட்டுத் தலைவர்களும் வரிசையில் நின்றனரென்றால் அதுதான் தலைவர் மண்டேலா கையாண்ட ஐக்கியப்படுத்தும் சக்தி. .

மண்டேலா இறந்த செய்தி கிடைத்ததுமுதல் அநேகமான நண்பர்களின் முகப்புத்தகங்கள் அனுதாப செய்திகளை மண்டேலாவின் படத்துடன் வெளிபரப்பின. எல்லாமே ஒருவித சோகப் பகிர்வுகள்தான் என்று சொல்லாம். அந்த சோகங்களைக் கண்ட ஒருவர் வெகுண்டு தன் புத்தகத்தில் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தார்: 'வாழும் போது ஒருவரின் உன்னதம் தெரிவதில்லை. மறைந்தவுடன் எழும் குற்ற உணர்ச்சியே மறைந்தவர் மீதான புனிதங்களை உருவாக்கிவிடுகிறது. வாழ்வில் பூரணமாக முரண்பட்ட ஒருவர் தன் மறைவில் புனிதமாகிவிடுகிறார்.??!!!! நண்பர்களே... அனைத்து முரண்பாடுகளையும் ஒருவர் வாழும் போதும் பேசுங்கள். மறையும் போதும் பேசுங்கள். நண்பர் ஒருவரை அவர் வாழும் காலங்களில் மரியாதை செய்யாது தூற்றியவர்கள் பலர் அவரது மறைவில் அவரைப் புனிதனாக்கியதைப் பார்த்தேன். வேண்டாம் நண்பர்களே... வாழும் காலங்களில் பேசுங்கள்."

முகப்புத்தகத்தில் இன்னுமொரு பகுதி 'நெல்சன் மண்டேலாவின் மறைவைக் கொண்டாடுவோம்" என்ற தலைப்பில் கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபட்டது. 'நெல்சன் மண்டேலா 95 வருடங்கள் ஒரு முழுமையான வாழ்வை முடித்துவிட்டார். தென் ஆபிரிக்க விடுதலைக்கான காரணங்களுள் இவரது 27 வருட சிறை வாழ்வும் முக்கியமானது. இவரைப் பற்றிய எதிர்க் கருத்துக்கள் பல இருந்தாலும் இவரது வாழ்வு கொண்டாடப்பட வேண்டியது.. கூடி அழுவதற்குரியதல்ல இவரது வாழ்வு." என்றார் ஒருவர். 'கூடித் தண்ணியடிப்பதற்கு எப்படியோ ஒரு காரணம் கிடைத்துவிடுகிறது" எனக் கடிந்துகொண்டார் இன்னொருவர். 'நம்மளப் போல நேர்மையான யோக்கியன் இதைவிட வேற இன்னாத்த பண்ண சொல்ற நைனா..!!" என்று அலுத்துக் கொண்டார் வேறொருவர். 'ஜொகானேர்ஸ்பேர்க்கின் ஒரு பகுதியில் காலஞ்சென்ற தமது தலைவரை பெருமை செய்யும் வகையில் ஆடிப் பாடுவோருடன் நெல்சன் மன்டேலாவின் பேரன் மன்ட்லா மன்டேலாவும் சேர்ந்து கொண்டார்." என்ற செய்தியை ஒலிபரப்பாளர் ஒருவர் பகிர்ந்து கொண்டார்.

எது எப்படியோ மண்டேலாவின் மறைவை மகிழ்வுடன் அவர்கள் ஏற்றுக் கொண்டதாகவே எனக்குப்பட்டது. அதே சமயம் என் மனதில் ஒரு கேள்வி விடாமல் விடாமல் தொடர்ந்து நெருடுகிறதே□ ஒருவரின் மறைவை மகிழ்ந்து கொண்டாடுவது சரியா தவறா?●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குயின்ரஸ் துரைசிங்கம்

# திருந்துவரா நம்மவர்?

விடுமுறை காலம் முடிவுக்கு வருகிறது. மீண்டும் ஒரு புதிய ஆண்டு. கடந்த ஆண்டில் நாம் தொடர்ந்து கொண்டிருந்த பல விடயங்களையும், மீண்டும் ஒருமுறை, புத்தாண்டில் விட்டு விடுவதாக முடிவெடுத்து, சில நாட்கள் மட்டுமே கழிந்து போகிறது. பழைய குருடி கதவைத் திறவடி என்ற கதையாக, விக்கிரமாதித்தன் முருங்கை மரமேறத் தயாராகிறான்.

புகைத்தலை விடுவதாகச் சொன்னது உண்மைதான். ஆனால் மனைவி என்னைக் கோபப்படுத்தியதால், புகைப்பதை நிறுத்தவில்லை. எனது பிழையல்ல, என் மனைவிதான் காரணம்.

நான் விடுவதாகத்தான் இருந்தேன், என் கணவன் என்னோடு சரியாகக் கதைக்கவில்லை, நேரத்தோடு வீட்டுக்கு வரவில்லை, வேலையிடத்தில் அதிக நேரம் செலவிடுகிறார் என்று, பலதும் என்னைக் கோபப்படுத்தியதால், புகைக்க ஆரம்பித்து விட்டேன். கணவனே இதற்குக் காரணம்.

எனது பிள்ளை என்னை எதிர்த்துப் பேசுகிறது. தான் நினைத்தபடியெல்லாம் நடக்கிறான், சொல்வழி கேட்பதாக இல்லை, இன்னும் இன்னோரன்ன அடுத்தவர் பிரச்சனைகளைக் காரணம் காட்டி, இவ் வருடத்திற்கான எனது இறுதித் தீர்மானங்களை ஒருவாறாக மீண்டும் ஒருமுறை, ஒரு வருடத்திற்குத் தள்ளிப் போட்டு விட்டேன்.

என்ன நடந்தாலும், அடுத்த வருடம் இவ்விடயத்தில் உறுதியாக இருப்பதாகத் தீர்மானம் எடுத்திருக்கிறேன். இந்த வருடம் மட்டும், எனக்கு நானே சில காரண காரியங்களை உருவாக்கி, உள்வாங்கி, அதன் மூலம் எனக்கு நானே நியாயம் வழங்கி, ஒரு வருடத்திற்கு எனது தீர்மானங்களை ஒத்தி வைத்திருக்கிறேன். இதற்கு நான் காரணமல்ல. என்னைக் குழப்பிய, கோபப்படுத்திய, அதிருப்தியடைய வைத்த, அல்லது வெறுப்பேற்றிய ஏனைய சிலரே இதற்கான காரணம்.

குடிப்பது, புகைப்பது, அடிப்பது, உதைப்பது, தகாத தொடர்புகள் - உறவுகள் என்று தீயன பலவற்றையும் தவிர்ப்பது அல்லது குறைப்பது ஒரு புறமிருக்க, ஏனைய பல தவிர்க்கக்கூடிய விடயங்களைக்கூட நாம் கவனிக்கத் தவறுகிறோம்.

உணவு விரயம்

என்னால் எதை, எவ்வளவு உண்ண முடியும் என்று எனக்குத் தெரிந்திருந்தாலும், இருப்பதையெல்லாம் அள்ளிக் குவித்து, கோப்பை நிறைய உணவை எடுத்து வருகிறேன். அதில் பாதி அளவைக்கூட என்னால் உண்ண முடியவில்லை. அதனாலென்ன, அப்படியே மேசையில் விட்டுவிட்டால், துப்பரவு செய்பவர்கள் எடுத்துச் சென்று கொட்டி விடுவார்கள் என்பது எனது வாதம். அவ்வளவையும் அவசியமில்லாமல் நான் விரயம் செய்கிறேன் என்பதை நான் உணர்வதற்கோ ஏற்றுக் கொள்வதற்கோ தயாரில்லை.

விழாக்களுக்குச் செல்லும் நம்மவர்கள், உணவு பரிமாறும் நிலையங்கள் திறக்கப்படுவதாக அறிவிக்கப் பட்டவுடன், ஓடிச்சென்று கோப்பைகளை நிறைத்துக் கொண்டு வருகிறார்கள். எதை உண்ணலாம், எதை உண்பதற்கு என்னால் முடியும், எவ்வளவு உணவை என்னால் உட்கொள்ள இயலும் என்ற எந்த உணர்வும் இல்லாமல், உணவுத் திடல்கள் திறக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட காரணத்திற்காகவே, ஓடோடிப்போய் அள்ளிக்குவித்து மேசைக்கு எடுத்து வருகிறோம்.

முள்ளிவாய்க்கால் அவலத்தின் போது மட்டுமல்ல, பொதுவாகவே எமது நாட்டிலும், உலகம் முழுவதிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள், பட்டினியில் மடிந்து போகிறார்கள், மீதிக் கோடானுகோடி மக்கள் உணவின்றி அல்லல் படுகிறார்கள். உலகெங்கும், மிக மோசமாகவே உணவு விரயம் நடக்கிறது. வருடத்திற்கு 1.3 பில்லியன் தொன் உணவு, அவசியமின்றி விரயம் செய்யப்படுவதாக உலக உணவு வங்கியின் கணிப்பொன்று தெரிவிக்கிறது.

1.4 பில்லியன் மக்கள் மிகக் கடுமையான வறுமையில் வாடுவதாகக் குறிப்பிடும் அண்மைய கணிப்பொன்று, உலகின் 50 வீதமான பகுதியில் வாழும் மக்கள், எதுவித அடிப்படைத் தேவைகளுமின்றி, ஒரு நாளுக்கு ஒரு நேர உணவுகூட இல்லாமல் அவதியுறுவதாகக் கூறுகிறது.

புது வருடத்தில் தீர்மானங்களை எடுக்கும்போது, நிறைவேற்ற முடியாத பலவற்றையும் ஒப்புக்கு எடுத்துக் கொள்வதும், பின்னர் ஒரு சில வாரங்களில் மீண்டும் பழைய நிலைமைக்கே திரும்பி விடுவதுமாய், பல வருடங்களைக் கழித்துவிடுகின்ற நாம், இவ்வருடம் இலகுவான இந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டால் என்ன?

எந்தக் காரணத்திற்காகவும், உணவை விரயம் செய்வதில்லை என்பதை மனதில் உறுதியாக எடுத்துக் கொள்வோம். குறிப்பாக, விழா மண்டபங்களில் அல்லது நாம் விருந்திற்குச் செல்லும் வீடுகளில், எம்மால் எதை உட்கொள்ள முடியுமோ அதை மட்டும் எடுத்துக் கொள்வது என்றும், மேலதிகமாகத் தேவைப்பட்டால், திரும்பவும் சென்று எடுத்துக் கொள்ளலாமே தவிர, ஒப்புக்கு அள்ளிக் குவித்து அனைத்தையும் எடுத்துவந்து, அப்படியே அரைவாசிக்கு மேல் விட்டுச் செல்வதை ஒட்டு மொத்தமாகத் தவிர்ப்பதென்றும், இறுக்கமானதொரு முடிவெடுப்போம்.

எமக்கு மட்டுமல்ல, ஏனைய பலருக்கும், எமது தாயக உறவுகளுக்கும், உலகில் துன்புறும் அனைத்து மக்களுக்கும், ஒரு நேர உணவாவது கிடைக்க வேண்டுமென்ற விருப்புடன், எனது பக்கத்தில் நிகழும் அவசியமற்ற உணவு விரயத்தைத் தவிர்ப்பதன் மூலம், நான் நம்புகின்ற அந்தத் தெய்வத்தின் ஆசியும் நிறைவாக எமக்குக் கிடைக்க புத்தாண்டில் அனுகூலம் கிட்டும்.

அனைவருக்கும் புதுவருட மற்றும் தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வா வெற்றிவேல் HOMELIFE FUTURE REALTY INC.
# வருட இறுதி ஒன்றுகூடலும் விருதுகள் வழங்கலும்





செல்வா வெற்றிவேலுவின் HOMELIFE FUTURE REALTY INC.வருட இறுதி ஒன்றுகூடலும் விருதுகள் வழங்கலும் கடந்த மாதம் 15ம் திகதி ஸ்காபரோ பீட்டர் & போல் விருந்துபசார மண்டபத்தில் நடைபெற்றது. முந்நூறுக்கும் அதிகமான விற்பனைப் பிரதிநிதிகளுடன் இயங்கும் மேற்படி நிறுவனத்தின் பதினொராவது ஆண்டு விருது வழங்கும் நிகழ்வு இது. இந்த வருடத்தின் அதிகூடிய விற்பனைச் சாதனை (Top Producer of the year - 2013) விருது திரு. ராஜ் நடராஜாவுக்கு வழங்கப்பட்டது. Top Listing Salesperson விருது சுகன் சிவராஜாவுக்குக் கிடைத்தது. Top Producers Team விருதினை சிவா சண்முகநாதனும் ஜோய் செல்வநாயகமும் தமதாக்கிக் கொண்டனர். Chairman Club விருதினைப் பின்வரும் எண்மரும் பெற்றனர்: சங்கர் மாணிக்கம், கணா நாகராஜா, சுகன் சிவராஜா, சிவா சண்முகநாதன், ஜோய் செல்வநாயகம், சத்தி சிவசுப்பிரமணியம், ராஜ் நடராஜா, கிரிஷ் சிவபாதம். Rookie of the Year விருது: குமார் அண்ணாமலை. மேலும் பல விற்பனை முகவர்கள் வெவ்வேறு சாதனை விருதுகளைப் பெற்றனர். (படங்கள்: இகுருவி. கொம்)















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Biztha தமிழ் பிசினஸ் கனக்ஷன்ஸ்

## Taste of Online Marketing விருது வைபவம்











தமிழ் பிசினஸ் கனக்ஷன்ஸ் மற்றும் இகுருவி ஆகிய ஊடகங்கள் இணைந்து வழங்கிய இரண்டாவதாண்டு Taste of Online Marketing வைபவமும் விருதுகள் வழங்கும் நிகழ்வும் ஸ்காபரோவில் டி.ஜே சிறீயின் சான்ட்னி விருத்துபசார மண்டபத்தில் கடந்த மாதம் நடைபெற்றது. தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த கோபிநாத்தின் உரை விழாவின் சிறப்பம்சமாக இடம்பெற்றது. சிறந்த ஊடகத் தகவல் இணையத்தளத்துக்கான விருது பெற Ninaivukal.com தெரிவாகியிருந்தது. அதன் அதிபர் திரு. கணா விருதைப் பெற்றுக் கொண்டார். சிறந்த தன்னார்வத் தொண்டு இணையத்தளத்துக்கான விருது கனடியத் தமிழ் இளையோர் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டது. சிறந்த தொழிற்சேவை இணையத்தளத்துக்கான விருது ஐதாமோர் உடனடிப் பணப்பரிமாற்ற/தங்க நகை மாளிகை நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. இதன் அதிபர் சிவம் தமது நிறுவனக் குழுவினர் சகிதம் விருதினைப் பெற்றுக் கொண்டார். சிறந்த கூட்டமைப்புக்கான இணையத்தள விருது www.noblereign.net நிறுவனத்துக்கு திரு. செல்வா வெற்றிவேலினால் வழங்கப்பட்டது. பல்துறை சார்ந்த பிரமுகர்களால் மண்டபம் நிறைந்திருக்கக் காணப்பட்டது. தமிழ் பிசினஸ் கனக்ஷன்ஸ் அதிபர் நவநீதன் அனந்தராஜ் அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தார்.

## கலைமன்றம் 'நிருத்த நிறைஞர்' பட்டமளிப்பு வைபவம்





திருமதி நிறைஞ்சனா சந்துரு அவர்களை அதிபராகக் கொண்ட கனடா கலைமன்றத்தின் ஒன்பதாவது ஆண்டு 'நிருத்த நிறைஞர்' பட்டமளிப்பு வைபவம் அண்மையில் நடைபெற்றது. நடனத்துறையில் பட்டம் பெற்றவர்கள் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன், ஆசிரிய தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் சான்றிதழ் வழங்கிப் பெருமைப்படுத்தப்பட்டனர். பட்டம் பெற்றவர்களை தகைசார் பிரமுகர்கள் அறிமுகம் செய்து உரையாற்றினர். திரு எஸ். திருச்செல்வம் தலைமையில் இவ்வைபவம் இடம்பெற்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்ராறியோ மாகாண றூஜ் றிவர் தொகுதியின்
# என். டி. பி வேட்பாளர் நீதன் ஷண்










ஒன்ராறியோ மாகாண சபைக்கான றூஜ் றிவர் தொகுதியின் என். டி. பி. வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கான அதன் தொகுதிக் கூட்டம் கடந்த மாதம் ஸ்காபரோ சீனக் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இங்கு நீதன் ஷண் போட்டியின்றி ஏகமனதாகக் கட்சியின் வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார். ஒன்ராறியோ என். டி. பி தலைவர் அன்ட்றியா ஹோவர்த் பிரதம விருந்தினராகக் கலந்து, நீதன் ஷண்ணின் தலைமைத்துவப் பண்பு, ஆளுமை, சேவை மனப்பான்மை, சமூக நோக்கு ஆகியவை பற்றி விபரித்துக் கூறினார். கட்சி உறுப்பினர்கள், தொண்டர்கள், ஆதரவாளர்களால் மண்டபம் நிரம்பியிருந்தது.

# நான்கு நாடுகளில்
# இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா




எழுத்தாளரும் கலை-இலக்கிய விமர்சகருமான ப. ஸ்ரீஸ்கந்தனின் மனசுலாவிய வானம், அரியாலையூர் நாடக ஆளுமைகள் ஆகிய இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா கடந்த அக்டோபர் மாதம் 27ஆம் திகதி மார்க்கம் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. கனடா ஈழநாடு பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு 'மனசுலாவிய வானம்' நூல். வீடு பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைகள் 'அரியாலையூர் நாடக ஆளுமைகள்' நூலில் இடம் பெற்றிருந்தன. இரண்டு நூல்களினதும் முதற் பிரதிகள் முறையே ஈழநாடு ஆசிரியர் ரி. கே. பரமேஸ்வரன் மற்றும் வீடு ஆசிரியர் திலீப் குமார் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. இரண்டு நூல்களினதும் அறிமுக விழாக்கள் நோர்வேயில் ஒஸ்லோவிலும், இங்கிலாந்தில் லண்டனிலும், யாழ்ப்பாணத்தில் அரியாலையிலும் நடைபெற்றன. நூலாசிரியர் ஸ்ரீஸ்கந்தன் தமது மனைவி மகள் சகிதம் அனைத்து விழாக்களிலும் கலந்து சிறப்பித்தார்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## INSURANCE MORTGAGE INVESTMENT

19 வருட கால வங்கி அனுபவத்துடன் உங்களுக்கான
அனைத்துக் காப்புறுதித் தேவைகளையும் உங்கள்
குழந்தைகளுக்கான கல்விச் சேமிப்புத் திட்டங்களையும்
வீட்டுக் கடன் மற்றும் வீட்டு அடமானக் கடன்களையும்
பெற்றுக் கொள்ள என்னை அழையுங்கள்.

- Permanent Life Insurances
- Term Life Insurance
- Critical Illness Insurance
- No Medical Exam Life Insurance
- Disability Income Insurance
- Super Visa Insurance
- Travel & Visitor Insurance
- RESP
- RRSP
- Fixed Rate Income Investment
- Residential Mortgage
- Line of Credit / Investment Loan
- Tax Free Savings Account



**Kavitha Senthilmurugan**
Financial Advisor
**Insurance/Mortgage/Investments**

CONTACT (416) 618-3651
KaviSenthilmurugan@gmail.com

## Brimley Road Medical Centre
# WALK-IN CLINIC & FAMILY PRACTICE

★ புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்
★ ஆண், பெண் குடும்ப மருத்துவர்களுடன் 7 நாட்கள் சேவை

Dr. உதயன் சோமசுந்தரம், MD,CCFP
Dr. சுபாதினி செந்தில் மோகன், MD,CCFP
Dr. நஸ்ரத் கான், MD,CCFP

| | |
|---|---|
| திங்கள் - வியாழன் | 9:00-7:00 |
| வெள்ளி...... | 9:00-5:00 |
| சனி & ஞாயிறு | 9:00-1:00 |

★ ஆய்வுகூடச் சேவையும் (Life lab), மருந்தகச் சேவையும் (IDA Pharmacy), இயன் மருத்துவ சேவையும் (Brimley Physiotherapy also provides massage therapy), இங்கு கிடைக்கும்

**(416) 412 3333**

**3333 Brimley Road**
Scarborough, ON M1V 2J7
(Between **Steels** & **McNicoll**)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# சிந்தனைக்கு ஒரு கரு

சிவபிரானை முழுமுதற் கடவுளாக வழிபடுஞ் சமயம் சைவம். சைவம் சிவனோடு சம்பந்தமுடையது. சிவசம்பந்தமுடையவர்கள் சைவர். இது சைபர், பூச்சியமானால் ஒன்றுமே இல்லை. பூச்சியத்தில் இருந்து ராச்சியம் செய்பவன் சிவபிரான். இதற்குச் சக்தியாய் விளங்குபவர் உமாதேவியார். சிவபிரானுக்குச் சக்தி யாவர்? இது நாவலர் எழுப்பிய வினா. இதுவே சைவ வினாவிடை. சிவபெருமானுக்குச் சக்தி உமாதேவியார். சக்தி சிவனின் வேறாகாதது. மலரும் மணமும் போல, நெருப்பும் சூடும் போல இவ்வுலக இயக்கமே சிவனாற்றான். "எங்கெங்கு காணிலும் சக்தியெடா, ஏழு கடல் அவள் வண்ணமெடா" என்பது சுப்பு இரத்தினத்தின் கூற்று. "சக்தி தொழிலே. அனைத்துமெனிற் சார்ந்த நமக்குச் சஞ்சலமேன்" எனப் பாடினார் பாரதி. இறைவியைச் சக்தியெனப் பாமாலை சாத்தினார். இரண்டுமொன்றே. சத்திநிபாதம் இறுதி இலக்கு. அறுபத்துநான்கு சக்தி பீடங்கள் அமைக்கப்பட்டதாகக் கதை.

அவளின்றி ஓரணுவும் அசையாது. சக்தி வழிபாடே சாக்தம். அர்த்தநாரீசுவரர் உமையொருபாக அமைப்பு. காசியிலே காமாட்சி. வங்கத்திலே காளி. மைசூரிலே சாமுண்டேசுவரி. மதுரையிலே மீனாட்சி. காஞ்சியிலே காமாட்சி. தில்லையிலே சிவகாமசுந்தரி. திருநெல்வேலியிலே நீலாயதாட்சி, குமரியிலே பகவதியென்று பல திருநாமங்களால் அழைக்கப்பட்டாலும் சக்தி ஒன்றே. இச்சா சக்தி, ஞானா சக்தி, கிரியா சக்தி என முத்திறத்தன சக்திகள்.

தேவயானை, வள்ளியம்மை, முருகனின் இச்சா கிரியா சக்திகள். வேல் ஞானசக்தி, திருமால் ஸ்ரீதேவி, பூதேவி சமேதராய்க் காட்சியளிக்கின்றார். பூரணை புட்கலே. அய்யப்பன் சக்திகள், சித்தி விநாயகர் சக்திகள், ஆஞ்சனேயர் நித்திய நைஷ்டிகம். பிரமச்சாரி அவருக்கும் சக்திகள் வரலாம் விநாயரைப்போல.

இந்த அடிப்படைத் தத்துவத்தைப் பூடகமாகக் கொண்டு கொஞ்சம் ஆழமாக நோட்டம் விடின் எல்லாம் வல்ல சிவ-னின் சக்தியாக அமைந்த பார்வதிக்குத் திருக்கல்யாணம் மேற்கொள்வதும் மொய் எழுதுவதும் சமய நெறிக்கு உகந்ததா. வெறும் கேலிக்கூத்தா கேளிக்கையா. ஒருபடி மேலே அம்பாளுக்கு ருது சாந்தி வைபவம் மேற்கொள்வது சமயத்தைப் பிசக்குவதா? ஏளனம் செய்வதா. புலம்பெயர்ந்த நாடுகளில் இதைப் பார்த்து ஏனையோர் கொச்சைப்படுத்துகிறார்கள். ஏன் அம்மா பகவானுக்கு திருமண வைபவம் மேற்கொண்டு நலங்கு பாடலாமா? எத்தனையோ கன்னிப் பெண்கள் (குமராக) விவாகம் செய்யாமல் இருக்கிறார்களே. அவர்களைக் கரையேற்றலாமே. இக்கருவைப் பொதுசனங்களின் முன் வைப்பது இன்றைய தேவையே. வெள்ளிரதங்களும், தங்க மஞ்சங்களும் தேவையா?

இதன் நுண்ணிய அடிப்படைத் தத்துவத்தைத் திரு. கல்யாண சுந்தர முதலியாரின் திருவாக்கிற் காண்போம். "கடவுள் ஓரிடத்தில் இருந்து படைப்புத் தொழில் செய்கிறார் என்பது எனக்கு விளங்கவில்லை. கடவுள் தூய அறிவு. அதற்கு இருவித நிலையுண்டு. ஒன்று கடந்த நிலை; மற்றொன்று கலந்த நிலை. முன்னையது பேச்சு எழுத்துக்களையுந் தாண்டித் தனித்து நிற்பது. இங்கே பின்னையதே தேவை. இஃது இன்ப அன்பாக யாண்டும் நீக்கமறக் கலந்து நிறைந்துள்ளது. இந்நிலைக்கு இறையென்று பெயர் வழங்கப்படுகிறது. இறையாண்டும் இறுத்தலையும் இருத்தலையும் உடையது. இவ்விறை இயற்கை வாயிலாகத் தன் விளைவுகளை ஆற்றி வருகிறது. அவ்விளைவுகளில் ஒன்று படைப்பு. படைப்பு என்பது இல்லாத ஒன்றை, புதிதாக உண்டு பண்ணுவது அன்று. உள்ள ஒன்றே காரியப்படுவது படைப்பு என்று சொல்லப்படுகிறது. அதற்குக் கடவுள் என்றும், அறிவு நிமித்தமாக நிற்றவான், அது கடவுள் படைப்பு என்று வழங்கப்படுகிறது. இது உபசாரம், உண்மையன்று."

பெண் ஆண் நுட்பம்

முழுமுதற் பொருளைப் பெண் ஆண் என்றும், தாய் தந்தை என்றும் கொள்வதால், அதற்குத் திண்ணிய உறுப்புகள் உண்டு என்று எவரும் கருதலாகாது. அப்பொருள்களின் பெண்மையுடன் ஆண்மையும் திண்ணிய உறுப்புகளை பெண் ஆண் வடிவங்களை உணர்த்துவன அல்ல. அவை நுண்ணிய சக்திகளை உணர்த்துவனவாம். புராணங்கள் அவைகளைத் திண்ணிய வடிவங்களாகக் கொண்டு திருமணப் படலங்களும் வகுத்து இருக்கின்றன.

அறிவால் கூர்ந்து உணரத்தக்க சிவதுமைகள் மனத்திற் பொருளாகுமாறு நம்புவது பௌராணிகம் ஆகும். ஞானநூல் ஆராய்ச்சி உடையோர், புராணக்கதைகளின் நுட்பம் உணர்ந்து இன்புறுவர், ஏனையோர் இடர்ப்படுவர்.

பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை விஞ்ஞானபூர்வமான உலகிற் சமயத்தின் பெயரால் செய்யும் சடங்குகளும் பூசையும் வெறும் ஏமாற்று வித்தையாய் அமையக்கூடாது. எனவே சைவசமயிகளும் விப்ரர்களும் சிந்திப்பார்களாக. சமூகத்தைத் தப்பான வழியில் இட்டுச் செல்வது இளந்தலைமுறையை ஏமாற்றுவதுமாகும். தெய்வம் சீறின் சைவம் அழியும் சிந்தித்துச் செயற்படுவோமாக.

எப்பொருள் எத்தமைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு
குறள் - 355

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
மெய்ப் பொருள் காண்பது அறிவு
குறள் - 423

எண்பொருள வாகச் சொல்லித்தான் பிறர்வாய்
நுண் பொருள் காண்பது அறிவு
குறள் - 424●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7

Scarborough, Ontario M1K 5JB

## Computek College

BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY

Est. 1991

www.computek.edu



We provide assistance for Second Career funded Applicants. E.I receiving /received, Maternity benefits received, WSIB, Ontario Works clients & New Immigrants welcome

**SECOND CAREER**

**You maybe eligible upto $28,000 to pay for:**

Living Expenses
Transportation
ChildCare
Books
Tuition and other

**Diploma Programs**

- Early Childcare Asst (ECA)
- Personal Support Worker (PSW)
- Medical Office Admin (MOA)
- Computerized Accounting
- Business Administration
- Application Development
- Network Engineering
- Enterprise Network Engineering

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

Not all the courses are available at all the locations




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ்

73



வைணவ இவ்விலக்கியங்களில் தமிழ் தமிழ் என்னும் ஆவேசக் குரல்

ஏறக்குறைய 1, 500 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றிய நாலாயிர திவ்விய பிரபந்தம் இன்றளவும் சுவைக்கத் தக்கதாய் இருப்பது என்றுமுள தமிழின் இளமைக்குச் சான்றாகும்.

இப் பாடல்களை உரையின் துணையின்றியே படித்துப் புரிந்து கொள்ளுமாறு ஆழ்வார்கள் இயற்றியிருப்பது குடியானவனும் அதனைப் படித்து அறிய வேண்டும் என்ற உயரிய நோக்கம் கருதியே எனலாம்.

எனினும் பழைய உரைகள் பெரும்பாலும் ஆரியமும் - தமிழும் கலந்த மணிப்பிரவாள நடையில் அமைந்துள்ளன. திருவாய் மொழிக்கான அத்தகைய உரையை முழுவதும் தமிழ்ப்படுத்தி சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது. உரைவளம் வேண்டுவோருக்கு அதுவொரு விருந்து.

உண்ணும் சோறு, பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான் என்ற உள்ளப் பாங்குடைய ஆழ்வார்கள் காலம் காலமாக சமூகத்தில் வேரோடிப்போன சாதி உணர்வை தகர்க்கப் பாடுபட்டுள்ளனர். அவர்கள் வழி வந்த இராமானுசர் இதைப் பலவழிகளில் நடைமுறைப்படுத்தி இருப்பதற்கான சான்றுகள் வரலாற்றில் உள்ளன. இக்காரணத்தால் சாதியைப் பேணுவதில் வைணவம் சைவத்தைவிட சிறிது நெகிழ்ச்சிப் போக்கைக் கடைப்பிடிக்கிறது எனக் கொள்ளலாம்.

வைணவத்தில் உள்ள ஆழ்வார்கள் பன்னிரண்டு பேர்களில் முதலாழ்வார்களான பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் மூவரும் 'அயோநிஜர்கள்' என்று அழைக்கப்படுகிறார்கள். இதன் பொருள் கண்டெடுக்கப்பட்டவர்கள் என்பதாகும். ஆழ்வார்களில் மிக உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ள நம்மாழ்வார் வேளாளர் குலம். அதிகமான பாசுரங்கள் பாடி அனேகமாக எல்லா திவ்ய தேசங்களுக்கும் சென்று பாடியுள்ள திருமங்கையாழ்வார் கள்ளர் (முக்குலத்தோர்) பிரிவினர். குலசேகர ஆழ்வார் சேரநாட்டு அரச குலத்தைச் சார்ந்தவர். தொண்டரடிப் பொடியாழ்வார், பெரியாழ்வார், மதுரகவியாழ்வார் அந்தணர் குலம்.
மதுரகவி ஆழ்வார் திருமாலைப் பற்றிப் பாடவேயில்லை. ஆனாலும் ஆழ்வார்களுள் ஒருவராக வைக்கப்பட்டுள்ளார். என்ன காரணம்?

கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன் என்னப்பனில்
நண்ணித் தென்குருகூர் நம்பி என்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே. (கண்ணிநுண் சிறுத்தாம்பு - 1)

தாய் யசோதையிடம் இனிய மாயம் செய்து, சிறு தாம்புக் கயிற்றால் தம்மை கட்டிவிட சம்மதித்த கண்ணபிரான் என் அப்பன் என்றால், அவனை விடவும் எனக்கு இனியவர் ஒருவர் இருக்கிறார். அவர் தெற்கில் உள்ள ஆழ்வார் திருநகரியில் அவதரித்த நம்மாழ்வார் ஆவார். "தென் குருகூர் நம்பி" என்று அவர் பெயரைச் சொல்வது எனக்கு பேரின்பம். பெயரைச் சொல்லும் பொழுதே என் நாவில் அமுதம் ஊறும்.

பெருமாளைப் பற்றி அல்ல நம்மாழ்வாரைப்பற்றி அவரே என் கடவுள் என்று பொருள் படும்படிப் பாடினார். இதில் கவனிகத்தக்கது என்னவென்றால் நம்மாழ்வார் வேளாளர் மதுரகவி அந்தணர். இந்தப் பரந்த நோக்கே, இறைவனின் முன் அனைவரும் ஒன்று என்ற தத்துவமே வைணவம் வளரக் காரணமாக இருந்தது.

திருப்பாணாழ்வார் மண்பாண்டம் வனையும் குலவர் குலம். ஆண்டாளுடைய சாதி தெரியவில்லை. துளசிச் செடியின்கீழ் கண்டெடுக்கப்பட்டாள் என்பது அய்தீகம்.

இவ்வாறு எல்லாக் குலங்களிலும் ஆழ்வார்கள் இருந்திருக்கிறார்கள். அது போலவே சைவ சமய நாயன்மார்களும் எல்லாக் குலங்களிலும் இருந்திருக்கிறார்கள். அறுபத்து மூன்று நாயன்மார்களில் அய்ந்து பேர் ஒடுக்கப்பட்ட குலத்தைச் சார்ந்தவர்கள். பாணர் குளத்தில் தோன்றிய திருப்பாணாழ்வாரை அரங்கன் கட்டளைப்படி லோக சாரங்கர் என்னும் அந்தணர் தோளில் சுமந்து திருவரங்கனிடம் சேர்ப்பித்தார். இதன் மூலம் வைணவம் அனைவருக்கும் ஏற்புடைய நெறி என ஆக்கினார்.

திருமழிசை ஆழ்வார் என்னும் தாழ்ந்த குலத்தில் பிறந்த ஆழ்வாரும்,

குலங்களாய ஈரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன்
நலங்களாய நாற்கலைகள் நாலிலும் நவின்றிலேன்
புலன்கள் அய்ந்தும் வென்றிலேன் பொறியிலேன் புனித நின்
இலங்குபாத மன்றிமற்றோர் பற்றிலேன் எம் ஈசனே. (திருமொழி நான்முகன் அந்தாதி)

எனப் பாடுகிறார். மேலான சாதிகள் நான்கிலும் பிறக்கவில்லை, கலைகளும் கல்வியும் இல்லை, இருந்தாலும் உன் பாதங்கள் தவிர வேறு ஒன்றும் அறியேன் என்ற பொருளில் வரும் பாசுரத்தில் திருமாலை அடைய குலமோ, கல்வியோ தேவை இல்லை என்ற கருத்து கூறப்படுகிறது.
திருமழிசை ஆழ்வார் வரலாறு திருநாவுக்கரசர் வரலாறு போன்றது. திருமழிசை ஆழ்வார் அட்டாங்க யோகம் செய்து இறைவனை அடையும் பொருட்டு சைவம், பவுத்தம், சமணம் என ஏழுக்கும் அதிகமான மதங்களில் சேர்ந்தார். சைவ மதத்தில் சிவவாக்கியம் என்ற பெயருடன் சிவவாக்கியர் திருஆயிரம் என்ற பதிகத்தை இயற்றினார். பிறகு திருமயிலை வந்து பேயாழ்வாரைச் சந்தித்தார். அவர் நாராயணின் திருமந்திரத்தை இவருக்கு முறைப்படி உபதேசித்து இவரை வைணவராக்கினார்.
நம்மாழ்வார் பாடல் ஒன்று பின்வருமாறு குறிப்பிடுகிறது,

குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து, எத்தனை
நலந்தா னிலாதசண் டாளசண் டாளர்க ளாகிலும்
வலந்தாங்கு சக்கரத் தண்ணல் மணிவண்ணற் காளென்றுள்
கலந்தார் அடியார் தம்மடி யாரெம் அடிகளே.
(திருவாய்மொழி)

“சாதிகள் அனைத்திலும் கீழானதிலும் எந்த நன்மையையும் இல்லாத சண்டாளர் சாதியில் பிறந்து அவர்களில் இழிந்த சண்டாளராக இருந்தாலும் வலக்கையில் சக்கரம் ஏந்தியுள்ள திருமாலின் அடியவர் என்று அறிந்தால் அவரின் அடியாரின் அடியார் யாரோ அவருக்கு நான் அடிமை” என்று கூறுகிறார்.
வலந்தாங்கு சக்கரத்து அண்ணல் - வலக்கையில் சக்கரப்படையை ஏந்திய திருமால்.
ஆள் - அடிமை; அடியவர். அடிகள் - வணங்கத்தக்க தெய்வம் தலைவர்.
திருநாவுக்கரசரும் இதே கருத்தை எதிரொலிப்பதைப் பார்க்கலாம்.

அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்

➤



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே. (தேவாரம் - ஆறாம் திருமுறை)
ஆவுரித்துத் தின்றுழலும் புலையராயினும் சிவபிரானுக்கு அன்பராகில் அவரேயாம் வணங்கும் கடவுள் என்கிறார் அப்பர். மேலும் "சாத்திரங்கள் ஓதுகின்ற சழக்கர்காள், கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்? என்றும் கேட்கிறார்.

இத்தகைய கருத்துகள் அக்காலத் தமிழ் மக்களை ஈர்த்திருக்கிறது.
மேலும் மருந்தைத் தேனில் கலந்து கொடுப்பது போல் வேதங்களையும் உபநிடதங்களையும் கொண்ட வடமொழிக்கு இணையாகத் தமிழைத் தெய்வ மொழியாக உயர்த்தி உணர்ச்சிப் பெருக்குடன் ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடியுள்ளனர். சங்கச் சான்றோர் செய்யுட்களிற் காணப்படாத இப்புதிய பண்பு பக்தி இலக்கியத்திற் புகுந்து கொள்கின்றது. தமிழ் தமிழ் என்னும் ஆவேசக்குரலை வைணவ இவ்விலக்கியங்களில் நாம் காதாரக் கேட்கலாம்.
செந்திறத்த தமிழோசை வடசொல் ஆகிய
தென்னன் தமிழை, வடமொழியை
என்று திருமங்கையாழ்வாரும்,
பன்னிய நூற்றமிழ்மாலை பாடுவித்து
என்சிந்தை மயக்கறுத்த திருவருளினானை
என்று அப்பரும்,
செந்தமிழர் தெய்வமறை நாவர்
என்று திருஞானசம்பந்தரும்,
திணைகொள் செந்தமிழ்
என்று சுந்தரரும் பாடியிருத்தல் இங்கு நினைக்கத்தகும்.

மொழிப்பற்றை முன்னிறுத்திப் பாடிய இவ்வடிகள், இன்றைய தமிழியக்க உணர்வுக்கான வேர்களாக விளங்குவது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

வைணவப் பெரியவர்கள் வரிசையில் திருமாலுக்கு அடுத்த நிலையில் இலக்குமியும் அவருக்கு அடுத்த நிலையில் வேளாளர் குலத்தில் தோன்றிய நம்மாழ்வார் இடம்பெற்றிருப்பது நோக்கத்தக்கது. இவரை 'சடகோபர்' என்று திருமால் கோயில்களில் பக்தர்களின் தலையில் வைக்கும் பெருமாள் பாதங்கள் ஸ்ரீ சடாரின் அவதாரம் என்றும் கருதுவர். (வளரும்)

# கிளிநொச்சியின் சாதனை மாணவி



கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலய மாணவியான பிரதா தெய்வேந்திரம்பிள்ளை, கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் அதிக பெறுபேறுகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலிடத்தில் வந்து சாதனை புரிந்துள்ளார்.

இரண்டு பாடங்களில் 'ஏ' தரத்திலும், ஒரு பாடத்தில் 'பி' தரத்திலும் இவர் சித்தி பெற்றுள்ளார்.

தமது முதலாவது வயதிலேயே தாயாரை இழந்த பிரதாவின் இரு மூத்த சகோதரர்கள் மாவீரர்கள். சிறிய தாயாரின் பராமரிப்பிலிருந்து வந்த இவர், வன்னி யுத்தத்தின் பின்னர் கல்வியைத் தொடர முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார். ஆனாலும் ஈராண்டு கடந்து பல துன்ப துயரங்களுக்கும் மத்தியில் பத்தாம் வகுப்பு, பதினோராம் வகுப்புப் பாடங்களை ஒன்றாகக் கற்று பரீட்சைக்குத் தோற்றி கிளிநொச்சி மாவட்டத்தின் முதல் மாணவியாகத் தேறியுள்ளார்.

போரின் வலிகளுக்கு மத்தியிலும் தமிழ் மாணவரின் கல்வி கற்கும் திறனையும் அதன் மீதான அதீத ஈடுபாட்டையும் பிரதா தெய்வேந்திரம்பிள்ளையின் அபார சாதனை வெளிக்காட்டி நிற்கின்றது.

Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer

Scotiabank
You're richer than you think.

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

## உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்







- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

**HEAVEN CARES**

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

Chapel Ridge

FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS

8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng

Funeral Counsellor


**416-431-3600** Ext:1

Call: **Christeen Seevaratnam**

Funeral Counsellor

**416-431-3600** Ext:2









| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 2.00/ M | அறுகம் புல் | $ 3.00/bag |
| உள்ளூர் கார்னேஷன் சரம் | $ 2.00/M | வில்வம் இலை | $ 3.00/bag |
| மல்லிகைப்பூச் சரம் | $ 5.00/M | வேப்பிலை | $ 3.00/bag |
| கார்னேஷன் மலர்கள் | $ 0.20 each | Marukhalundu /Maru | $ 3.00 /bag |
| மல்லிகை மலர்கள் | $ 5.00/bag | மாவிலை | 10 per $ 1.00 |
| சம்பாகினி மலர்கள் | $ 3.00 /bag | வெற்றிலை | 10 per $ 1.00 |
| அரலி மலர்கள் | $ 3.00 /bag | வாழை இலை | $ 1.00 each |
| தாமரை மலர்கள் | $ 1.00 each | துளசி இலை | $ 3.00/bag |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# ஆஸ்திரேலியா உனக்குக் கூட புரியவில்லையா?!!!

கிரிக்கெட் போட்டிகள் வர வர பயிற்சியாளர்களின் போட்டியாக மாறிவருகிறது. டேரன் லீமேன் அசிங்கமாக நடந்து கொள்வது எப்படி என்று ஆஸ்திரேலியாவுக்கு கற்றுக் கொடுத்து வருகிறார். இங்கிலாந்தும் வெற்றி பெறும்போது அசிங்கமான நடத்தைகளுக்கு விதிவிலக்கல்ல.

இந்த நிலையில் மறைந்த உலக மகாத் தலைவர் நெல்சன் மண்டேலா, மகாத்மா காந்தியை தென் ஆப்பிரிக்க பேட்ஸ்மென் ஹஷிம் ஆம்லா நினைவூட்டியுள்ளார்.

"நெல்சன் மண்டேலா தனது வாழ்க்கை முழுதும் எப்படி வாழ்ந்தாரோ, எந்த கொள்கைக்காக வாழ்ந்தாரோ, அதேபோல் இந்திய மகாத்மா காந்தி எந்தக் கொள்கைக்காக வாழ்ந்தாரோ, உயிர் துறந்தாரோ, அதே உணர்வை கிரிக்கெட் மைதானத்திலும் கடைப்பிடிப்பது அவசியம். உலகத்திற்கு இந்த மாபெரும் தலைவர்கள் கொண்டுவந்தது எதுவோ அதைக் கடைப்பிடிக்கவேண்டும்" என்றார்.

ஆனால் கேப்டன் ஏ.பி. டிவிலியர்ஸ் தனது வெள்ளை ஆதிக்க உணர்வை விட்டு இன்னும் வெளிவரவில்லையோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது அவர் கூறுவது இதுதான்:

"அனைவரும் கண்களில் நேசத்துடனும் அன்புடனும் நம்மைப் பார்க்கின்றனர். ஆனால் டெஸ்ட் போட்டிகள் இன்னும் இருக்கும் நிலையில் இந்த 'அன்பு' தென் ஆப்பிரிக்காவுக்கு தேவையில்லை என்றே தோன்றுகிறது" என்று ஒரு நகைச்சுவையுணர்வுடன் கூறியதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆம்லா சொல்வது யாருக்குப் புரிகிறதோ இல்லையோ, ஆஸ்திரேலியா உனக்குக் கூட புரியவில்லையா?

சச்சின் டெண்டுல்கருக்கு பாரத ரத்னா கொடுக்கலாமா?

சச்சின் டெண்டுல்கர் இந்தியாவுக்காக கடந்த 24 ஆண்டுகள் விளையாடியுள்ளார். சரிதானே! ஆனால் இது தவறு. டெக்னிக்கலாக அவர் பிசிசிஐ-யிற்குத்தான் விளையாடியுள்ளார். பிசிசிஐ-யைத்தான் பிரதிநிதித்துவம் செய்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியமே தன்னை பல முறை தன்னை சில ஆண்டுகளுக்கு முன்பு அவர் ரூ.2 கோடி வருமான வரியை தவிர்க்க அவர் தனது தொழில் விளம்பரத்தில் நடிப்பதே என்று வெளிப்படையாக கூறினார். இ.எஸ்.பி.என். ஸ்டார் ஸ்போர்ட்ஸ், பெப்சி அன்ட் கோ ஆகியவற்றின் மூலம் ரூபாய் 5 கோடியே, 92 லட்சத்து 31 ஆயிரத்து 211 சம்பாதித்தார். அதற்காக அவருக்கு ரூ.2,08,59,707 வருமான வரி விதிக்கப்பட்டது. கலைஞர்களுக்கு வருமான வரியில் சலுகைகள் உண்டு. சச்சின் அந்த அடிப்படையில் 2 கோடி வரிவிதிப்பில் சலுகைகளைப் பெற்றார். வருமான வரி மதிப்பீட்டு அதிகாரி சச்சினிடம் உங்கள் தொழில் என்ன என்று கேட்டதற்கு அவர் "நான் ஒரு பிரபல மாடல், பல்வேறு நிறுவனங்களின் வர்த்தகப் பொருட்களுக்கு விளம்பரம் செய்கிறேன்" என்று எழுதிக் கொடுத்துள்ளார்.

இதுபோன்ற விளம்பர வருவாயை சச்சின் "வர்த்தகம் மற்றும் தொழில்" மூலம் வந்த வருவாயாகவும், கிரிக்கெட் ஆடி சம்பாதித்த பணத்தை 'பிற ஆதாரங்களிலிருந்து வந்த வருவாய்' என்றும் பிரித்துக் காட்டினார். அதாவது தான் தொழில் பூர்வமாக கிரிக்கெட் வீரர் அல்ல. ஒரு மாடல் என்று சச்சினே ஒப்புக் கொண்டுள்ளார்.

தேர்தல் வருவதால் சச்சின் டெண்டுல்கருக்கு பாரத ரத்னா வழங்குவதாக நடப்பு ஆட்சி ஒரு ஸ்டண்ட் முடிவெடுத்தது அவ்வளவே. ஏற்கனவே உள்துறை அமைச்சகமும், விளையாட்டுத் துறை அமைச்சகமும் ஹாக்கி வீரர் மேஜர் தயான் சந்திற்கு பாரத ரத்னா வழங்கவேண்டும் என்று பரிந்துரை செய்திருந்தது தற்போது பின்னுக்குத்தள்ளப்பட்டுள்ளது.

செஸ் மேதை விஸ்வநாதன் ஆனந்த் அனைத்து உலக செஸ் சாம்பியன்ஷிப் ஃபார்மேட்டுகளிலும் பட்டம் வென்றுள்ளார். அவருக்கு ஏன் கொடுக்கக்கூடாது என்று கேள்விகள் தற்போது எழுந்து வருகின்றன.

சச்சின் ஓய்வை வைத்து பிசிசிஐ-யும் ஸ்டார் ஸ்போர்ட்ஸும் பணத்தை கட்டியதையடுத்து ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி சச்சின் பாரத ரத்னாவை அறிவித்து வாக்கு வங்கியாக மாற்றியுள்ளது அவ்வளவே.!!!●


• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

JRB Universal Inc.
Almost All Services Available

647 289 6164



R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.

Scholarship Plan [RESP]

Any Referral Service

• Credit Counseling • Accounting & Tax Services •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R & S
AUTO SALES
Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

36 வருட அனுபவம்



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha

R & S Auto Sales Inc.
Radha Motor Inc.
3030 Markham Road
Scarborough, ON
416-412-3838
416-836-5825



எஸ். காந்தி

# வெள்ளிப் பணம்

83

2013ஆம் ஆண்டுவிடைபெற்று, 2014ஆம் ஆண்டுக் காலகட்டத்திற்குள் நுழைந்திருக்கின்றோம். சுயமுன்னேற்றம், தன்முனைப்புச் சிந்தனையுடையவர்கள் இந்த ஆண்டில் எப்படியான இலக்கை அடைவது என்று திட்டமிட்டுச் செயல்படுவார்கள். அப்படியான விடயத்தில் அவர்களின் நிதி சம்பந்தமான இலக்கும் உள்ளடக்கப்பட்டிருக்கும். எப்படியாயினும் நாம் முற்றுமுழுதாக 2013ஆம் ஆண்டினை மறந்துவிட முடியாது. அப்படி நாம் மறந்துவிட்டாலும் Canada Revenue Agency எமக்கு 2013ஆம் ஆண்டுக்கான விடயங்களை ஞாபகப்படுத்தும். அதுதான் 2013ஆம் ஆண்டுக்கான வருமானவரிப் பத்திரம் பூர்த்தி செய்யும் விடயமாகும். உளவியல் ரீதியாகப் பார்க்கின்றபோது உயர்ந்த வருமானம் உழைப்பவர்களுக்கு மகிழ்ச்சி தராத விடயமாகவும், மத்திம வருமானம் பெறுபவர்களுக்கு இது மகிழ்ச்சியோ, துக்கமோ கொடுக்காத விடயமாகவும், குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு மனதுக்குத் திருப்தியைக் கொடுக்கும் காலம் எனக் கொண்டாலும், மேற்சொன்ன முதல் பகுதியினர் எல்லோருக்கும் அப்படியான சூழ்நிலைதான் இருக்கும் எனஉறுதியாகக் கூறமுடியாது. இதில் விதிவிலக்குகளும் உண்டு.

எனவே கடந்த வருட வருமானவரி சம்பந்தப்பட்ட தகவல் சிலவற்றைப் பார்ப்போம். மத்திய அரசாங்கத்தின் வரிவிலக்குள்ள வருமானமும் வருமானவரி விகிதாசாரமும் எப்படியாக 2013ஆம் ஆண்டு இருக்கப் போகின்றது எனப் பார்க்கையில், ஒருவர் தனிநபராக இருந்தால் அவர் உழைத்த வருமானத்தில் முதல் $11,038 டாலருக்கு வருமானவரி விலக்கு உண்டு. இது 2012ஆம் ஆண்டுக்கு $10,822 டாலராக இருந்தது. இது 2014ஆம் ஆண்டுக்கு $11,138 டாலராக இருக்கப் போகின்றது.
அடுத்து, மாகாண அரசின் வரிவிலக்குத் தொகையினை அவதானிக்கும்போது, ஒன்ராறியோ மாகாணத்தில் 2013ஆம் ஆண்டு வருமானவரி விலக்குள்ள தொகையாக $9,574 டாலர்கள் இருக்கின்றது. இது 2012ஆம் ஆண்டு $9,405 டாலர்களாகக் காணப்பட்டது. இது 2014ஆம் ஆண்டுக்கு $9,670 டாலர்களாக இருக்கும்.

மத்திய அரசாங்கத்தின் வருமானவரி விகிதாசாரம் $43,561 டாலர்கள் வரையில் 15 சதவீதமும், 43,561 டாலரிலிருந்து $87,123 டாலர் வரையிலான வருமானத்துக்கு 22 சதவீத வரியும், $87,123 டாலரிலிருந்து $135,054 வரையான வருமானத்துக்கு 26 சதவீத வரியும் $135,054 க்கு மேற்பட்ட வருமானத்துக்கு 29 சதவீத வரியும் விதிக்கப்படுகின்றது.

அடுத்ததாக ஒன்ராறியோ மாகாண அரசின் வரிவிகிதாசாரத்தினை அவதானிக்கும்போது $39,723 டாலர்கள் வரையில் உங்கள் வருமானத்துக்கு 5.05 சதவீதவரியும், $39,723 இலிருந்து $79,448 டாலர்கள் வரையில் 9.15 சதவீதவரியும், $79,448 டாலர்களிலிருந்து $509,000 டாலர்கள் வரையான வருமானத்திற்கு 11.16 சதவீத வருமானவரியும், 509,000 டாலர்களுக்கு மேற்பட்ட வருமானத்துக்கு 13.16 சதவீத வருமானவரியும் விதிக்கப்படுகின்றது.

இதனை நீங்கள் வாசிக்கும்போது கவனிக்க வேண்டிய விடயங்களாக நீங்கள் வெவ்வேறு வருமான எல்லைகளைக் கொண்டிருப்பீர்கள். அதேபோன்று குடும்ப அங்கத்தவர்களின் தொகை, 18 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளின் தொகை, கணவன், மனைவி இவர்களில் ஒருவர் மாத்திரம் வருமானம் உழைப்பவர்களாக இருத்தல், உங்களுக்கான மருத்துவச் செலவு, பிள்ளைகளுக்கான (Child care) பராமரிப்புச் செலவு, RRSP க்கான பங்களிப்பு இப்படியான விடயங்களுக்கு உங்களுக்கு வரிச் சலுகைகள் உண்டு.

இதனைச் சரியான முறையில் அதற்கான ஆலோசனையை உங்கள் வருமானவரிப் பத்திரம் பூர்த்தி செய்பவரிடம் ஆலோசனை பெற்று, எந்த விடயங்கள் உங்களுக்குப் பொருத்தமானதாக இருக்குமோ அதற்கு ஏற்ற முறையில் நீங்கள் செயல்படுவதன் மூலம் நீங்கள் நன்மை பெறமுடியும். அத்துடன் வருமானவரி சம்மந்தமான அடிப்படையான தகவல்தான் இக்கட்டுரையில் தரப்பட்டுள்ளது. இப்படியான தகவல்கள் 18 வயதுக்கு மேற்பட்ட எல்லோருக்கும் அத்தியாவசியமானது. இதனை அறிந்திருப்பதன் மூலம் வருமானவரிப் பத்திரம் பூர்த்தி செய்பவர் எப்படியான சேவையை எமக்கு தருகின்றார் என்பதனைப் புரிந்துகொள்ள முடியும்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடையின் கீழ்
சகல தேவைகளும்

எஸ்.பி. இம்போட்டர்ஸ்
**S.P. Importers**



**Fresh Fish & Meat**
2853 Lawrence Ave. East
Scarborough
416 261 4737

**Furniture & Mattress**
2859-2861 Lawrence Av. E.
Scarborough
416 266 3077

**Grocery & Vegetables**
2863 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

**Video & Audio**
2865 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

## காது மடலில்...

பாரமற்ற காது வளையங்களும் உசிதமானவை. ஆனால் குழந்தைகள் இருப்பவர்களுக்கு இதனால் சிறிய ஆபத்தும் உண்டு. வளையத்திற்குள் கையை வைத்து குழந்தைகள் விளையாடும்போது இழுபட்டு துவாரம் கிழிவதையும் காது மடல் அறுந்துவிடுவதையும் காண முடிகிறது. இதைத் தடுக்க சிறிய 'ஸ்ரட்' போன்ற பாரமற்ற காதணிகளை சிறிது காலத்திற்கு அணிவது உசிதமானது.

குத்திய உடன் குருதி கசியும் காயம் இருக்கும் போதே தோடு அணிவதால் சிலருக்கு சிக்கல் ஏற்படுவதுண்டு. தோட்டில் உள்ள உலோகங்களால் ஒவ்வாமை அழற்சி ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம். அதைத் தடுப்பதற்காக துவாரம் இடப்பட்டதும் உடன-டியாகத் தோடு அணிவதை தவிர்த்து துவாரத்தில் சிறிய நைலோன் நூலைச் செலுத்தி முடிந்து வைப்பதும் உண்டு. புண் நன்கு காய்ந்த பின் தோடு அணிந்தால் ஒவ்வாமை ஏற்படாது.

'ஒரு மாதம் காத்திருக்க முடியாது. வாற கிழமை கலியாணம் வருகிறது, சாமத்தியச் சடங்கு ஒன்று இருக்கிறது' என பலர் அவசரப்படுத்துவார்கள். ஸடட் வைத்து அழுத்தக் கூடிய தோடுகளை தற்காலிகமாக அணிய வேண்டியதுதான்.

வேறு பிரச்சனைகள்
காது மடல் பெரிதாக இருப்பவர்கள் இருக்கிறார்கள். பிறப்பிலேயே பெரிதாக இருந்து வளரும்போது மேலும் பருத்திருக்கும். சிலருக்கு அதில் சதைகள் மடிப்புற்று அழகைக் கெடுக்கும். சமுத்திரத்தில் மணற் துளியைப் போட்டதுபோல பெரிய மடிந்த காதில் காதணி மறைந்து விடுகிறது என்ற கவலை சிலருக்கு ஏற்படும். அப்படியான காதின் அளவைச் சிறிதாக்கவும் சத்திரசிகிச்சைகள் உள்ளன. ஆனால் அவற்றை அதற்கான சத்திரசிகிச்சை நிபுணர்களே செய்வது நல்லது.

Thanks:- www.plasticsurgerydallas.com

செயற்கைக் காதுகள்
செயற்கைக் கால், செயற்கை மூட்டு எல்லாம் வந்துவிட்டன. செயற்கைக் காதும் வருவதற்கான காலம் வெகு தூரத்தில் இல்லை. இவை வெறுமனே ரோபோவின் உலோகக் காதுகள் போன்றவை அல்ல. இரத்தமும் சதையும் குருத்தெலும்புகளும் கூடிய காதுகள். வளைந்து மடியக் கூடிய உயிரோட்டம் உள்ள காதுகள். Harvard Medical School in Boston, and the Kensey Nash Corporation in Philadelphia இணைந்து எலிகளுக்கான காதுகளை தயாரித்துள்ளார்கள்.

Artificial ear grown in lab
இத் தொழில்நுட்பம் வளர்ச்சியுறும்போது, விபத்துகளில் காதுகளை இழந்தவர்கள் இதன் மூலம் எதிர்காலத்தில் பயன்பெறுவார்கள் என நம்பலாம்.●

**The Children's Education Trust of Canada**
offered to the public by
**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற**
சிவா
கணபதிப்பிள்ளை
**அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Branch Manager
416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகம் வே. இராசலிங்கத்தின் நான்கு நூல்கள் வெளியீடு









தீவகம் வே. இராசலிங்கம் அவர்கள் எழுதிய நான்கு ஆன்மீக நூல்களின் வெளியீட்டு விழா அண்மையில் ஸ்காபரோ கந்தசாமி ஆலயத்தில் திரு. சாமி அப்பாத்துரை தலைமையில் வெகு சிறப்பாக இடம்பெற்றது.



# ரொறன்ரோவில் கோவிலூர் செல்வராஜனின் நூல் வெளியீடு



லண்டனில் வாழும் கோவிலூர் செல்வராஜனின் 'இல்லாமற் போன இன்பங்கள்' கட்டுரைத் தொகுப்பு நூலின் வெளியீட்டு விழா கடந்த நவம்மர் மாதம் 30ம் திகதி ஸ்காபரோ கந்தசாமி ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. கல்கிதாசன் எஸ். பி. கனக்ஸ் தலைமையில் நடைபெற்ற விழாவில் கோவிலூர் செல்வராஜன் இலங்கை வானொலியில் கடமையாற்றிய காலத்தில் அங்கு பணியாற்றிய ஊடக நண்பர்களான பி. விக்னேஸ்வரன், வி. என். மதிஅழகன், திரு எஸ். திருச்செல்வம், இளையபாரதி உட்பட பல இலக்கியவாதிகள் இங்கு உரையாற்றினர். நூலாசிரியர் விழாவில் மதிப்பளித்து சிறப்புச் செய்யப்பட்டார்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்



RE/MAX
**Community Realty Inc.**
Brokerage*



## Kannan Panchalingam

Sales Representative

**647-928-8889**

1265 Morningside Ave. Suite # 203, Toronto, ON M1B 3V9
Business: 416-287-2222 • Fax: 416-282-4488
pkannanp@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடிய உள்நாட்டு தபாற்தலை 63 சதத்திலிருந்து ஒரு டாலராகின்றது

கனடாவுக்குள் பயன்படுத்தப்படும் உள்நாட்டுக் கடிதங்களுக்கான தபாற்தலைக் கட்டணம் தற்போதைய 63 சதத்திலிருந்து எதிர்வரும் மார்ச் மாதம் 31ம் திகதி பாரிய விலை உயர்வைக் காணவுள்ளது. புதிய விலை அதிகரிப்பு இரு வகையானதாகவிருக்கும். பெருமளவான முத்திரைகளைக் (booklets or coils) கொள்முதல் செய்யும்போது 85 சதம் என்ற வகையில் கட்டணம் செலுத்த வேண்டும். சில்லறை முறையில் ஒன்று அல்லது இரண்டு என்றவாறு பெறும்போது ஒரு முத்திரைக்கு ஒரு டாலரைச் செலுத்த வேண்டும் தற்போது உள்நாட்டுச் சேவைக்கான முத்திரையின் விலை 63 சதமாகவிருந்தாலும், எச். எஸ். ரி வரியும் சேர்த்து 71 சதம் செலுத்தப்படுகின்றது. இதேபோல புதிய அதிகரித்த விலைக்கும் 13 சதவீத எச். எஸ். ரி வரியுண்டு. அமெரிக்காவுக்கும், சர்வதேச நாடுகளுக்குமான தபாற்தலைகளின் விலைகளிலும் மாற்றம் வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் விபரம் மார்ச் மாதமளவில் வெளிவருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## ரொறன்ரோ நகரசபைத் தேர்தல் அக்டோபர் 27 திங்கட்கிழமை

ரொறன்ரோ நகரசபைக்கான அடுத்த தேர்தல் இந்த வருடம் அக்டோபர் மாதம் 27ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இதற்கான நியமனப் பத்திரங்கள் இந்த மாதம் 2ம் திகதியிலிருந்து செப்டம்பர் 12ம் திகதி வரையும் ஏற்கப்படும். மேயர் பதவி உட்பட 44 அங்கத்தவர்கள் மற்றும் கல்விச் சபை உறுப்பினர்களுக்கான பதவிகளுக்கு நடைபெறும் தேர்தலில் 1.5 மில்லியன் ஆட்கள் வாக்களிக்கவுள்ளனர். ரொறன்ரோவின் தற்போதைய மேயரான றொப் போஃர்ட் உட்பல பல நகரசபை உறுப்பினர்கள் மேயர் பதவிக்குப் போட்டியிட முன்வந்துள்ளனர் கடந்த நகரசபைத் தேர்தல் 2010 அக்டோபர் 25ம் திகதி நடைபெற்றது. ஒன்ராறியோ மாகாணத்தின் சகல உள்ளூராட்சிச் சபைகளுக்கும் அக்டோபர் 27ம் திகதியே தேர்தல் நடைபெறும்.

## ஸ்டீபன் ஹாப்பரின் கன்சர்வேடிவ் செல்வாக்கு சரிந்து செல்கிறது

ஸ்டீபன் காப்பர் தலைமையிலான கனடிய கன்சர்வேடிவ் கட்சியின் செல்வாக்கு சரிந்து வருவதாக பிந்திய கருத்துக் கணிப்புகள் தெரியப்படுத்துகின்றன. தற்போது ஒரு தேர்தல் நடைறெுமாயின் ஜஸ்ரின் ரூடோவின் லிபரல் கட்சியே ஆட்சியைக் கைப்பற்றுமென்றும் கணிப்புகள் கூறுகின்றன.

## பிரபலமான பெயர்கள் லியாம், வில்லியம் ஒலிவியா, எம்மா

கனடாவில் கடந்த ஆண்டு பிறந்த குழந்தைகளுக்குச் சூட்டப்பட்ட பெயர்களில் பிரபல்யமானவைகளாககச் சில முன்னணி வகிக்கின்றன. ஆண் குழந்தைகளுக்கான பெயர்களில் லியாம், வில்லியம், ஈதன், ஜேக்கப், நேதன், ஒலிவர் ஆகிய பெயர்கள் அதிகமாகச் சூட்டப்பட்டுள்ளது. பெண் குழந்தைகளுக்கு ஒலிவியா, எம்மா, சோபியா, லீ ஆகிய பெயர்கள் அதிகமாகச் சூட்டப்பட்டுள்ளது.

## பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகள் அதிகம்

கனடாவில் பிறக்கும் குழந்தைகள் தொடர்பான புதிய விபரமொன்று வெளிவந்துள்ளது. இங்குள்ள ஒவ்வொரு மாகாணத்திலும் கடந்த வருடம் பிறந்த குழந்தைகளில் ஆண்குழந்தைகளே அதிகம். சராசரியாக நூறு பெண் குழந்தைகளுக்கு 105 ஆண்குழந்தைகள் என்ற வீதத்திலேயே பிள்ளைகள் பிறந்துள்ளன. உதாரணத்துக்கு ஒன்ராறியோவில் பிறந்த 140,135 குழந்தைகளில் 71,833 ஆண்கள், 68,302 பெண்கள். கியுபெக் மாகாணத்தில் பிறந்த 88,583 குழந்தைகளில் 45,307 ஆண்கள், 43,276 பெண்கள்.


HERITAGE Education Funds

RESP
SAVINGS PLAN
கல்விச் சேமிப்புத் திட்டம்

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

EDUCATION IS
A GREAT GIFT FOR
YOUR FUTURE GENERATIONS

உங்கள் பிள்ளைகளின்
கல்விக்கான சேமிப்பு உங்கள்
எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

INCOME TAX
PREPARATION

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns




S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

Graphic Lord - 647. 219. 7576

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


# FREE ! Real Estate Classes




## Successful Real Estate Office With Over 300 Salespeople

TOP 5 HOMELIFE OFFICE IN CANADA 2012

TOP 6 HOMELIFE OFFICE IN CANADA 2011

TOP 7 HOMELIFE OFFICE IN CANADA 2010

★No Franchise Fees ★No Monthly Fees ★No Desk Fees

**International Award Winning Office**

**Top 5th HomeLife Office In Canada-2012**

- Atractive Commission Split.
- Over 300 Salespersons.
- Daily Training, Full Services Office
- 24 Hrs Access to the Office
- Office Open 7 Days/ Week

HOMELIFE HIGHER STANDARDS



**HOMELIFE /FUTURE REALTY INC.,** Brokerage
205 -7 Eastvale Dr., Markham, Ontario, L3S 4N7
**Bus: 905.201.9977 | 416.264.0101**

*Based on TREB data: 2012. (does not include independent or other franchisors). ©2012 HomeLife Realty Services Inc. All Rights Reserved.Each Office is Independently Owned and Operated. Not intended to solicit Agents or Brokers currently under contract.

*INDEPENDENTLY OWNED AND OPERATED*

**Selva Vettyvel**
*Broker of Record*
**Tel:416-568-4301**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org